# சூயஸ் யார் சொத்து?

ஆர். கே. கண்ணன்

★

ஜனசக்தி பிரசுராலயம்
73, பிராட்வே, சென்னை-1.

அக்டோபர், 1956

விலை 4 அணு

ஜனசக்தி பிரஸ், பிராட்வே, சென்னை-1.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை ... ... | 5 |
| 1. | சுதந்திர உதயம் ... ... | 7 |
| 2. | சுயேச்சைக் கொள்கை ... ... | 10 |
| 3. | அஸ்வான் அணைக்கட்டு ... ... | 13 |
| 4. | ஆதிக்கத்துக்கு அடி ... ... | 17 |
| 5. | கால்வாய் வரலாறு ... ... | 19 |
| 6. | பித்தலாட்டப் பிரச்சாரம் ... ... | 21 |
| 7. | வல்லான் வகுத்ததே வாய்க்கால் ... ... | 25 |
| 8. | மென்ஜிஸ் குழுவின் தூது ... ... | 30 |
| 9. | காமன்ஸில் ஈடன் ... ... | 33 |
| 10. | அணியிலே குழப்பம் ... ... | 37 |



சூயஸ் கால்வாய்
துருக்கி
சோவியத் யூனியன்
மத்தியதரைக் கடல்
சிரியா
ஈராக்
பாரசீகம்
லிபியா
எகிப்து
சவூதி அரேபியா
சூடான்
ஏமன்
ஏடன்
அராபிக்கடல்
எதியோப்பியா
0 100 200 400 600 800

# சூயஸ்: யார் சொத்து?

## முன்னுரை

ஜூலை மாதம் 26-ம் தேதி! சூயஸ் கால்வாய் தேசத்தின் சொத்து என்று பிரகடனம் செய்தார், எகிப்து ஜனாதிபதி நாசர். நாமிருக்கும் நாடு நமதே என்றார், நாசர்.

அவ்வளவுதான் —

அண்டபேரண்டங்கள் அதிர்ந்ததே என்று பாரிஸ் ஓலமிட்டது; யுகப்பிரளயம் வந்தேவிட்டது என்று லண்டன் கதறியது! ஐயோ, உலகம் அழிகிறது என்று வாஷிங்டன் ஒப்பாரி வைத்தது.

சாந்தி சிதைந்தது, நீதி நலிந்தது, நியதி குலைந்தது, சட்டம் முறிந்தது - எல்லாம் அந்தப் படுபாவி, நாசர், செய்த மோசம்! விட்டேனா பார், அவனை! என்று ஈடன்—பிரிட்டிஷ் பிரதம மந்திரி—சீறினார். நாசரைத் தொலைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன் என்று மார் தட்டினார் பீனோ—பிரெஞ்சு வெளி நாட்டு மந்திரி. நாசரை நாசம்செய்யப் பலாத்காரத்திலிறங்கலாம் என்று ஈடனையும், பீனோவையும் உசுப்பினார், டல்லஸ்—அமெரிக்க வெளி நாட்டு மந்திரி.

என்ன அமளி துமளி! என்ன கூப்பாடு! என்ன பேய்க் கூத்து!

சாந்தி சிதைவுறவில்லை, நாசர் நடவடிக்கையால்.

நைல் நதியில் நீர் ஓடிக்கொண்டுதானிருந்தது.

சூயஸ் கால்வாய் கிழக்கு மேற்காய்த் திசை மாறி, வக்கரித்துக் கொண்டு செல்லவில்லை.

சூயஸ் கால்வாயில் சென்ற கப்பல்கள் தலைக்குப்புறக் கவிழ்ந்து விடவில்லை.

கப்பலோட்டிய மாலுமிகளின் தலைகள் அவரவர்கள் தோள் மீதுதான் இருந்தன, உருண்டு போகவில்லை.

எங்கும் அமைதிதான்!

அண்டச் சுவர்கள் இடிந்து விழவில்லை; இதுவரை கூடிய மட்டும் பத்திரமாகவே இருந்து வருகின்றன—வழக்கம்போல. ஏழு லோகமும் உடைந்துபோகவில்லை, வால்நட்சத்திரம் வகையறுக்களெல்லாம் நடுவிலே சிக்கித் துவையல் ஆகவில்லை!

கிழக்கு கிழக்காயும் மேற்கு மேற்காயும் தான் இருந்தன.

மனிதர்கள், மனிதர்களாகவே இருந்தனர்.

ஆனல், சிலருக்குத்தான்—

பைத்தியம், ஜன்னி!

சாதாரணமானதல்ல; நன்ருய் முற்றிப்போயிருந்தது.

இந்த வியாதியையும், வியாதியஸ்தர்களேயும் இந்தியா கண்டிருக்கிறது; இவர்களின் பிதற்றல்களும், வாய் வலிப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் சகஜமான விஷயமே. அதுமட்டுமா? வியாதிக்கு நல்ல மருந்து கொடுத்து, நோயாளியைக் குணப்படுத்தி அவன் வீட்டுக்கு இந்தியா அனுப்பியுள்ளது. பூர்ணமாகக் குணமாகாவிட்டால், இன்னெரு டோஸ் கொடுக்க இந்தியாவிடம் இன்னும் மருந்தும், ஊசியும் இருக்கத்தான் செய்கிறது.

அது, எகிப்திடமும் உண்டு. எகிப்து அதைக் கொஞ்சம் தாராளமாகவே, ஒரு டோசுக்கு இரண்டு டோசாக, கொடுத்து வருகிறது. வேறு என்ன வழி? நோய் கடுமையாகிவிட்டால், மருந்தும் அப்படித்தானிருக்கும்.

இந்த நோய்தான் ஏகாதிபத்யம் என்பது.

நோயாளிகள் யார்? ஈடன், பீனே, டல்லஸ் வட்டாரங்கள். இவர்களுடன் இவர்களேச் சூழ்ந்து நிற்கும் டாலர் பணமூட்டைகளும், சவரன் பாங்கிகளும், பிரெஞ்சு 'மஞ்சள் கடுதாசிகளும்'.

ஒருவனே அழிக்குமுன்னல், கடவுள் அவனைப் பைத்தியமாக்குகிருர் என்பது ஒரு மேற்கத்திய பழமொழி இந்தப் பைத்தியங்களின் கையிலே சர்வ தேசச் சட்டங்களும், அரசியல் அகராதிகளும், சிக்கிச் சின்னுபின்ன மடைகின்றன.

எகிப்து விடுதலை வீரன் நாசர், ஒரு பாசிஸ்ட்—என்று அரசியல் அகராதியைத் தலைகீழாய் வாசிக்கிருர், ஈடன்.

யுத்தக் கப்பல்களும், துருப்புகளும் எகிப்துக்கருகே குவிவது சமாதானத்திற்காகத்தான் என்கிருர் பீனே.

எகிப்து மக்கள் நாசரை நம்பினல் போதாது, எனக்கு நம்பகமான ஆள் அங்கே ஆட்சியிலிருக்கவேண்டும்—என்கிருர் ஈடன். சர்வதேச நீதி படுகிற பாட்டைப் பாருங்கள்.

சூயஸ் கால்வாய் அந்நியர் ஆதிக்கத்திலிருந்தால்தான் சுதந்திரம் வளரும், "சுதந்திர உலகு" நிம்மதியாக மூச்சுவிடும், என்று டல்லஸ் அரசுரிமைக்குப் புதிய பாஷ்யம் அருளிச் செய்கிருர்.

சூயஸ் கால்வாயை எங்களால்தான் திறமையாக நிர்வகிக்க முடியும்; எகிப்தியர்களுக்கு அது முடியாது—என்கிருர்கள், "சமத்துவத்துக்கு" நவ நாகரீக அர்த்தம் கற்பிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

நான் சொன்னபடி நீ கேள்—அதுதான் சுதந்தரம், விடுதலை, அரசுரிமை—என்கிருர் உலக ரட்சகர் டல்லஸ்.

இவைதான் ஏகாதிபத்ய ராஜ தந்திரம், நாகரீகப்பண்பு, அரசியல் அறவழி.

ஒரே இரவில் பைத்தியம் முற்றி ஈடன் தலை நரைத்துவிட்டது; பீனே பிதற்றியவாறிருக்கிருர்; டல்லஸ் வாய் குழறுகிறது, நா இப்படியும் அப்படியும் புரள்கிறது. யார் குற்றம் அது?

அதோ பாருங்கள்—கெய்ரோவை, எகிப்து தலை நகரை.

கெய்ரோ சாலைகளில் தென்னை மரங்கள் எவ்வளவு அழகாய், பசுமையாய், தலையாட்டிக் கைகொட்டி அந்நியர்களை அழைத்து வரவேற்கின்றன பாருங்கள்! என்ன ஆனந்தமயமான காட்சி, சாந்தி மயமான கோலம்!

அந்நியர்களே! நல்ல சிந்தனையுடன் வாருங்கள்! நல்ல நோக்கத்துடன் வாருங்கள்! தலை வணங்குகிருேம், வாழ்த்துகிருேம், வரவேற்கிருேம்—என்று அத்தென்னை யோலைகள் செய்தி யொலிக்கின்றன, நகை முகத்துடன் நல்லாசி கூறுகின்றன.

எகிப்துக்குச் சாந்திவேண்டும்; உலகுக்குச் சாந்திவேண்டும்! மிரட்டலும், உருட்டலும் பலிக்காது.

எகிப்து மக்களின் விடுதலை, அரசுரிமை, சுதந்திரமான வளர்ச்சி, — இவற்றை நொறுக்கவோ, குறுக்கவோ யாராலும் முடியாது, என்று உலக மக்கள் குமுறியெழுந்து விட்டனர். ஜனதிபதி நாசர் தலைமையில் எகிப்து மக்கள் மேருபோல் வளர்ந்து நிமிர்ந்து ஏகாதிபத்தியக் குழுவை எதிர்த்து வருகின்றனர்.

## அத்தியாயம் 1

## சுதந்திர உதயம்

உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க பெரு நாள், ஜூலை 26 1956. ஏகாதிபத்ய முறையின் சவப்பெட்டியில் பலமாய் மற்ருெரு ஆணி அறைந்த நாள் அந்நாள். அரசுரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் ஆசிய,

ஆப்ரிக்க, அராபிய மக்களின் விடுதலையெழுச்சி மூச்சும், வீச்சும் பெற்று வீர்யத்துடன் புதிய சிகரத்தை எட்டியதை உலகுக்குப் பறைசாற்றிய பெருநாள். அண்டிக்கெடுத்தும் அடுத்தவனைச் சுரண்டியும் வாழ்வதையே உயிர்ச் சூத்திரமாகவும், சம்பிரதாய மாகவும் கொண்ட ஏகாதிபத்ய ராஜதந்திரம், ஆசிய ஆப்ரிக்க அராபிய நாடுகளின் இளந்தலைமையில் உருவான முதிர்ந்த, அறவழிப்பட்ட அரசியல் கலைக்கு முன்னே புறமுதுகிட்டோடிய நாள், ஜுலை 26, 1956. அன்றுதான், சூயஸ் கால்வாய் தேசியச் சொத்து என்று ஜனாதிபதி நாசர் உலகுக்கு அறிவித்த நாள்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின்பு, கடந்த பத்தாண்டுகளில் விடுதலைப் போரில் வாகை சூடிய பல நாடுகளில் எகிப்தும் ஒன்று. 1952-ம் ஆண்டில் எகிப்து மக்களின் தேசிய விடுதலைப் புரட்சி, இராணுவத்தின் தலைமையில் வெற்றிபெற்றது. உள்நாட்டுப் பிற்போக்குக்கு அரணாகவும் அந்நிய ஏகாதிபத்யங் களுக்குத் தூணாகவும், நின்ற பரூக் மன்னனின் முடியாட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. இரவோடிரவாக, பரூக் நாட்டை விட்டு ஓடினான். தேசீய ராணுவத் தலைமையின் நிர்வாகம் அமைந்தது. எகிப்து மக்கள், புத்தாட்சிக்கு ஆதரவு பெருக்கித் தந்தனர். அதைப் பின்னிட்டு, ஜெனரல் நகீப் விலகி நாசர் தலைமை ஏற்பட்டதின் விளைவாக தேசிய ஆட்சி முறை கெட்டிப் பட்டது, ஸ்திரமாயமைந்தது. எகிப்தில் பல்லாண்டுகளாக முகாமடித்திருந்த பிரிட்டிஷ் துருப்புக்கள் வெளியேறவேண்டிய தாயிற்று. எகிப்து அரசியல் சுதந்திரம் நிறைவுற்றது.

பண்டைக் காலத்திய உலக நாகரீகத்திற்கு, இந்தியா, சீனா, கிரீஸ் நாடுகள்போலவே, எகிப்தும் ஒரு சிறந்த கருவூலமாயிருந் தது. இந்தியாவுடனும், தமிழகத்துடனும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும், பண்டைக் காலத்திலிருந்தே எகிப்து (மிசிரம்) தொடர்புகொண்டு, ஈடும் எடுப்புமில்லாச் சிறப்புடன் வாழ்ந்தது. அப்படிப்பட்ட எகிப்து நூருண்டுகளாய்ப் பிரிட்டிஷ் ஆதிக்கத் துக்கு உட்பட்டு, பொருளாதாரத் துறையில் சீரழிந்தது. இந்தி யாவின் அளவுக்குக்கூட எகிப்து தொழில் வளர்ச்சி பெறவில்லை.

எனவே, தொழிலாளி வர்க்கத்தின் தொகை குறைவாகவே இருந்தது. கொடிய அடக்குமுறையின்கீழ் அது பலவீனப்பட் டிருந்தது. சுதேசி முதலாளி வர்க்கம் இந்தியாவில் வளர்ந்த அளவுக்குக்கூட வளரவில்லை. பெரும்பாலும் பருத்தி வியாபாரத் தில் பொருளீட்டிய வர்க்கமாகும் அது. எனவே அது நிலப் பிரபுக்களுடனும், அந்நியர்களுடனும் பல தொடர்புகளைக் கொண் டிருந்தது. படித்த மத்தியதர வர்க்கம் தீவிரமாகச் செயலாற்றும் தன்மையுடனும், வறுமையை யொழித்துச் சுதந்திரப் பயிரை வளர்க்கும் துடிப்பும் துணிவும் கொண்டதாகவும் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் படித்த மத்தியதர வர்க்கத்தாரின் புத்திரர்களும், விவசாயிகளின் புதல்வர்களும்கொண்ட எகிப்திய இராணுவத்தில், புரட்சிக்கு ஒரு தலைமை உருவாயிற்று. இராணுவத்தின் இளந்தலைவர்கள், பாலஸ்தீனத்தில் அரபு நாடுகளுக்கு நேர்ந்த தோல்வியைக் கண்டு வெட்கமும் ஆத்திரமுமடைந்தார்கள். பரூக் மன்னராட்சியின்மீது தீராப் பகைமை வளர்த்தார்கள். விவசாயிகளின் வறுமையை நன்கறிந்த அவர்கள், பரூக் ஆட்சியின் ஊழலையும், டாம்பீகத்தையும், கண்டு மனங் குமுறினர். தாய் நாட்டு மண்மீது அந்நிய பிரிட்டிஷ் படைகள் அட்டகாசமாய் ஆதிக்கஞ்செலுத்தி வந்தது, எகிப்து ராணுவத்தையும் மக்களையும் கொதிப்படையச் செய்தது. இவையனைத்தின் விளைவாக, எகிப்திய ராணுவத்திற்குள்ளேயே "சுதந்திர ஆபீசர்கள் இயக்கம்" என்றதொரு இயக்கம் உருவாகி வளர்ந்தது, வலுவடைந்தது, 1952-ல் புரட்சிக்குத் தலைமை வகித்து வெற்றியும்கண்டது.

மீண்டும் உலக அரங்கில் எகிப்து தனக்குரிய மகத்தான பாத்திரத்தை வகிக்க முன் வந்துவிட்டது.

அரபு நாடுகளின் விடுதலை இயக்கங்களிலேயே மிகவும் வலுமிக்க இயக்கம் எகிப்தினுடையது. எனவே, அரபு நாடுகளிலும், வட ஆப்பிரிக்க நாடுகளிலும் நடக்கும் விடுதலை இயக்கங்களுக்கு எகிப்து தலைமை வகிப்பதில் ஆச்சரியமென்ன? எகிப்து விடுதலை இயக்கம் இந்திய தேசிய விடுதலை இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது நமக்குத் தெரியும். இந்திய தேசீய இயக்கத்தின் வெற்றிகளைக்கண்டு உற்சாகமும் ஊக்கமும் பெற்று வளர்ந்தது எகிப்து இயக்கம்.

எனவே, சுதந்திரம் பெற்ற கிழக்காசிய நாடுகளுடன் தொடக்கத்திலிருந்தே நேசம் பாராட்டி நல்லுறவு பூண்டு எகிப்து அரசு செயல்பட்டதில் ஆச்சரியமடைய வேண்டியதில்லையல்லவா?

எல்லா காலனி மக்களுடைய விடுதலை இயக்கங்களுக்கும் பேராதரவு தந்து உதவிய சோவியத் யூனியன், எகிப்து இயக்கத்துக்கும், தான் உதித்த நாள் முதலாய் தார்மீக ஆதரவு தந்து வந்துள்ளது. எகிப்து விடுதலை இயக்கம் வெற்றிபெற்றவுடன் சோவியத் யூனியனுக்கும் எகிப்துக்குமிடையே இராஜீய உறவுகள் மேலும் பலப்பட்டன.

இந்நிகழ்ச்சிகள் ஏகாதிபத்யங்களுக்கு எட்டிக்காயெனக் கசந்தன. உள்ளுக்குள்ளே வெஞ்சினம் புகைந்துகொண்டேயிருந்தது. என்றாலும் ஒன்றும் செய்ய இயலாமல் தவியாய்த் தவித்தன. மெள்ள மெள்ளத்தான் மென்னியைத் திருகிக் கொல்ல முடியும் என்று கணக்கு போட்டன.

## அத்தியாயம் 2

# சுயேச்சைக் கொள்கை

எகிப்து சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து வெளி நாட்டுத் துறையில் ஒரு சுதந்திரமான நடுவுநிலைக் கொள்கையைக் கடைப் பிடிக்க ஆரம்பித்தது. உலக இராணுவக் கூட்டணிகள் எதிலும் சேர மறுத்தது. தனது அண்டை நாட்டு நண்பர்களான சுதந் திர அரபு நாடுகளுடன் இணைந்து அரபு லீக் என்ற ஸ்தாபனத் தில் பிரதான பங்கு கொண்டது.

இந்த அரபு ஒற்றுமையை உடைக்கவும், மத்திய கிழக்கு நாடு களின் சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தி மீண்டும் அடிமைப்படுத்த வும் ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்யங்கள் இஸ்ரேல் அரசை உப யோகித்துக்கொண்டன. அரபு நாட்டு எல்லைகளில் இஸ்ரேலுடன் சச்சரவுகள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. சிறிய நாடாய் இருந் தாலும் இஸ்ரேல் இராணுவம் பிரம்மாண்டமாய் வளர்ந்திருந்தது. ஏகாதிபத்யங்கள் அதைக் கொழுக்க வைத்து வந்தார்கள். எல் லையோரச் சச்சரவுகளுக்குத் தூபம் போட்டு வளர்த்து வந்தால் ஏகாதிபத்யங்கள் குவித்துவரும் யுத்த தளவாடங்களுக்குச் சந்தை கிடைத்த மாதிரியுமிருக்கும், சுதந்திரம் பெற்ற அரபு நாடுகள் தேசத்தைப் புனருத்தாரணம் செய்யும் முயற்சியில் இறங்க முடி யாதபடியும் தடுக்கலாம் அல்லவா? அதனுல்தான், இன்றுவரை பாலஸ்தீனத்தில் ஒரு ஐக்கிய நாடுகள் போர்நிறுத்தக் கமிஷன் குந்திக்கிடக்கிறது.

1954ம் ஆண்டு மத்தியில் இந்தோ-சீனப் போர் நிறுத்தம் சம்பந்தமாக ஜினீவா ஒப்பந்தம் ஏற்பட்டதல்லவா? அங்கு தோல்வி கண்டதைப் பொறுக்கமுடியாமல், அதைத் தொடர்ந்து மேலைய வல்லரசுகள் தென் கிழக்கு ஆசியாவில் தென்கிழக்கு ஆசிய இராணுவக் கூட்டணி (ஸீடோ) ஒன்றை நிறுவின. மத்திய கிழக்கில் மத்திய கிழக்கு பந்தோபஸ்து கூட்டணி (மீடோ) என்று ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கப்பார்த்தன. சீடோ கூட்டணியையும், அத்துடன் உதித்த அமெரிக்க பாகிஸ்தான் ஒப்பந்தத்தையும் இந்தியா எதிர்த்து நின்றதுபோல, மத்திய கிழக்கு மீடோ' கூட்டணியை எகிப்து கடுமையாக எதிர்த்தது. மீடோ செத்தொழிந்தது.

பின்பு பாண்டுங். சரித்திரப் பிரசித்தி பெற்ற பாண்டுங் மகா நாட்டில் எகிப்து ஒரு பிரதான பாத்திரம் வகித்தது. பஞ்சசீலக் கொள்கைக்கு எகிப்து மற்றொரு பிரதான தூணய் விளங்கியது. பாண்டுங் மகாநாட்டுக்குச் செல்லாதபடி எகிப்தைத் தடுக்க முயற்

சித்த ஏகாதிபத்யங்கள் தோல்வி கண்டன. சர்வதேச அரங்கில் எகிப்தின் உறவுகளும் செல்வாக்கும் வளர்ந்தன.

ஏகாதிபத்யங்களுக்குப் பொறுக்குமா? அரபு நாடுகளுக்கு விலங்கு பூட்டி வைத்துவிட இப்பொழுது பிரிட்டன் முயற்சித்தது. பழைய 'மீடோ' பூதம் மீண்டும் புறப்பட்டது. பாக்தாத் ஒப்பந்தம் என்று ஒரு இராணுவக் கூட்டணியில் அரபு நாடுகளைச் சிக்க வைக்க பிரிட்டன் வலை வீசியது. துருக்கியும், ஈரானும், ஈராக்கும், வலையில் வீழ்ந்தன. எகிப்து அதைக்கடுமையாய் எதிர்த்து கண்டித்தது. எகிப்துடன் சவுதி அரேபியாவும் சிரியாவும் லெபனானும் ஜார்டனும் எதிர்ப்பு அணியில் திரண்டன. மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் அரபு நாடுகளைக் குலுக்கின. ஜார்டானில் புதிய மந்திரி சபை தோன்றியது. கிளப் பாஷா என்கிற ஆங்கில தளகர்த்தன் அரபு ராணுவத் தலைமையிலிருந்து நீக்கப்பட்டு கல்தா கொடுக்கப்பட்டான். அரபு லீக் ஸ்தபனத்தைப் பலவீனப்படுத்தவும், அரபு ஒற்றுமையைக் குலைக்கவும், யுத்த சகதியில் மத்திய கிழக்கு நாடுகளை இழுத்துவிடவும், பிரிட்டன் செய்த முயற்சியே பாக்தாத் ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தின்கீழ்ச் சில நாடுகளுக்கு இராணுவ சாதனங்களை ஏகாதிபத்யங்கள் கூடுதலாக அனுப்ப ஆரம்பித்தன. இஸ்ரேலுக்கும் தளவாடங்கள் போயின.

சவுதி அரேபியாவுக்குச் சொந்தமான எண்ணெய்க் கிணறுகள் நிறைந்த பிரதேசத்தை ஒரு நாள் லபக்கென்று பிரிட்டன் ஆக்ரமித்துக் கொண்டது. தனது கைப்பாவைகளான ஸ்தல ஷேய்க்குகளைச் சேர்த்துக்கொண்டு, பிரிட்டிஷ் இராணுவத்தைச் செலுத்தி, எண்ணெய் வளமிக்க அந்தப் பிரதேசத்தை பிரிட்டன் வசப்படுத்திக் கொண்டது.

இராணுவ மிரட்டலுக்கும், முரட்டுத்தனமான ஆக்ரமிப்புகளுக்கும் பயந்து அரபு நாடுகள் ஒடுங்கி விடும்; எகிப்து மண்டியிட்டுக் கெஞ்சும் காலம் வந்து விட்டது, என்று மேலைய ஏகாதிபத்யங்கள் உள்ளூற பூரித்துப் போயின.

ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க் கம்பெனியைத் தேசியச் சொத்தாக்கத் துணிந்த ஈரானை ஒரு குட்டு குட்டி தோப்புக் கரணம்போட வைத்ததுபோல எகிப்தையும் இதர அரபு நாடுகளையும் செய்யலாம் என்று மனப்பால் குடித்தன.

பாவம்! புதிய உலக நிலை யறியாத குருடர்கள். பிரம்மாண்டமாய் வளர்ந்த சோஷலிஸ்ட் நாடுகளின் சக்தியையும், விடுதலையுற்ற புதிய ஆசிய நாடுகளின் சக்தியையும், உலக சமாதானப் பிரியர்களின் சக்தியையும், அவர்கள் காணவில்லை, காண மறுத்தார்கள்.

150 கோடிக்கும் அதிகமாக மக்கள் தொகையை அணைத்து நிற்கும்—உலக ஜனத் தொகையில் பெரும்பான்மையைப் பஞ்ச சீலப் பதாகையின் கீழ் திரட்டியிருக்கும்—சமாதான மண்டலத்தின் செல்வாக்கை அவர்கள் துச்சமென மதித்தார்கள்.

இராணுவத் துறையில் பயமுறுத்தியது போலவே, பொருளாதாரத் துறையிலும் பிரிட்டனும் அமெரிக்காவும் எகிப்தை சங்கடத்திற்குள்ளாக்கப் பார்த்தன. எகிப்தின் பிரதான ஏற்றுமதிப் பொருள் பருத்தியே. எகிப்தின் பொருளாதாரத்துக்கு ஜீவாதாரமானதும் பருத்தியே. இந்தப் பருத்தியை உலக மார்க்கெட்டில் எகிப்து விற்கமுடியாதபடி அமெரிக்கா அலைக்கழித்தது. பருத்தி விலையைக் குறைத்து எகிப்து நஷ்டமடையும்படி செய்ய அமெரிக்கா முயன்றது.

எகிப்து பயப்படவில்லை. நிலைமை முன்பு போல இல்லை. எகிப்து தன்னந்தனியாயில்லை. புதிதாய்ச் சுதந்தரம் பெற்றுள்ள நாடுகளுக்குத் தன்னல மறுப்புடன் உதவும் சோஷலிஸ்டு நாடுகள் உண்டு. எந்த இராணுவக் கூட்டணிகளிலும் சேரவேண்டியதில்லை. உதவியின் பேரால் ஈனமிக்க பொருளாதார அடிமை ஒப்பந்தங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை, சம நிலையில் பரஸ்பர உதவி செய்து கொள்ள எப்பொழுதும் தயார்—என்று பெர்லினிலிருந்து பீகிங் வரை ஒரு மகா மண்டலமே கோஷிக்கிறதே! எகிப்து ஏன் பயப்பட வேண்டும்?

சோஷலிஸ்ட் செக்கோஸ்லோவாகியாவுடன் எகிப்து வியாபார ஒப்பந்தம் செய்தது. ஏகாதிபத்யச் சூதுகளும், சதிகளும், சடசட வென்று முறிந்து போயின.

பருத்திக்கு நல்ல விலை கிடைத்தது; உலக விலையுடன் ஒப்பிட்டால் மிகவும் சகாயமான விலைதான். எகிப்து பொருளாதாரம் பிழைத்தது. எகிப்தின் பருத்திக்கு மாற்றுப் பண்டமாக செக்கோஸ்லோவேகியா தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய யந்திர உதவி கொடுத்தது. அத்துடன் எகிப்துக்குத் தேவையான நவீன யுத்த தளவாடங்களையும் கொடுத்தது. இது எகிப்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தியது. எகிப்தின் விடுதலைக்கும், அரசுரிமைக்கும் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள உதவியது. எந்த நேர்மையான கோரிக்கையை, உதவியைத் தருமாறு அமெரிக்காவை எகிப்து கேட்டும் தரவில்லையோ அந்த உதவியைச் செக்கோஸ்லோவேகியா தயக்கமின்றிக் கொடுத்தது.

மீண்டும் எகிப்து தலை நிமிர்ந்து நின்றது. அரபு நாடுகள் பேருவகை பூத்தன. செக்கோஸ்லோவாகியா போலந்து, ஹங்கேரி, யுக்கோஸ்லோவியா முதலான நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தன. வட

ஆப்பிரிக்க விடுதலை இயக்கம் புதிய உற்சாகத்துடன் முன்னேறியது.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போலாயிற்று, ஏகாதிபத்ய வாதிகளின் நிலைமை.

அல்ஜீரிய மக்களின் ஆயுதந் தாங்கிய வீரச் சமருக்கு எகிப்து தார்மீக ஆதரவளித்தது. அதைத் தடுத்தாக வேண்டும்.

நவசீனக் குடியரசை எகிப்து அங்கீகரித்து விட்டது. நாசரும் நேருவும், டிட்டோவும் பிரியோனி தீவில் சந்தித்துப் பேசப் போகிறார்களாம். அதையும் தடுக்க வேண்டும்.

பொருளாதாரப் புனருத்தாரணத்தில் நாசர் முழு மூச்சுடன் இறங்கத் திட்டமிடுகிறார். அதையும் முடக்கிப் போட வேண்டும்.

என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?

ஏகாதிபத்யங்களின் நெற்றி சுருங்கியது; உள்ளங் கருகியது; சிந்தனை ஓடியது, ஓடியது ......

திடீரென்று புறப்பட்டது பாணம், டல்லஸ் பாசறையிலிருந்து.

அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்துக்கு அமெரிக்கா உதவப் போவதில்லை—என்று டல்லஸ் அறிவித்தார்.

அதை மறுநாளே ஆமோதித்தார் ஈடன்.

அதுதான் சரி, என்று பலமாய்த் தலையசைத்தார் பீனே.

எதிர்ப்பாராத சமயத்தில் காலை வாரிவிட்டோம். நாசர் முதுகெலும்பு முறிந்தது, இனி எகிப்து பிழைப்பது கஷ்டம்—என்று குள்ள நரிகள் குதியாட்டம் போட்டன.

நாசரின் கொட்டத்தை அடக்கவேண்டும்; நாசரின் கர்வத்தை ஒடுக்கவேண்டும்; நாசரின் "ஆதிக்கக் கனவுகளை" அழிக்கவேண்டும் என்று பச்சை மொழியில் பறையடித்தன, வாஷிங்டன் வட்டாரங்கள். அமெரிக்க-பிரிட்டிஷ் பத்திரிகைகளும், ரேடியோக்களும் உலகெங்கும் ஒலிபரப்பின.

அஸ்வான் அணைக்கட்டா? டல்லஸ் பாணமா? என்ன அது?

## அத்தியாயம் 3

# அஸ்வான் அணைக்கட்டு

அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணரவேண்டுமானால், முதலில் எகிப்திய பொருளாதாரத்தைக் கொஞ்சம் தெரிந்துகொள்வது நலம்.

எகிப்திய பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயமே. புரட்சிக்கு முன்பு நாட்டின் விளை நிலத்தில் பாதி பெரு நிலச்சுவான்தார்களுக்கே சொந்தமாயிருந்தது. 100-க்கு 50 விவசாயிகள் அன்றாடக் கூலிகளாக உழைத்தனர். எனவே, புதிய ஆட்சி

1952 அக்டோபர் மாதத்தில் நிலவுடமைக்கு வரம்புகட்டும் சட்டத்தைப் பிறப்பித்தது 300 ஏகராவுக்குமேல் யாருக்கும் நிலம் சொந்தமாயிருக்கக்கூடாது என்று அச்சட்டம் கூறியது. இதன் மூலமாக, ஏழரை லட்சம் விவசாயக் கூலிகளுக்கு நிலம் கிடைத்தது. மேலும், பள்ளிக்கூடங்களை நிறுவவும், கூட்டுறவு ஸ்தாபனங்களை உருவாக்கவும், சாலைகள் அமைக்கவும், குடிதண்ணீர் வசதிசெய்து கொடுக்கவும் சர்க்கார் பல நடவடிக்கைகள் எடுத்தது. இச்சீர்திருத்தங்கள் மக்களிடையே விழிப்பையும் தன்னம்பிக்கையையும் பெரிதும் வளர்த்தன.

இந்தச் சாதனைகள் எல்லாம் அடிப்படைப் பரிகாரங்கள் ஆகா. எகிப்துக்கு அவசரத் தேவை, தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சிக்கு மூலத் தேவை மின்சார உற்பத்தி வசதிகள் ஒருபுறமும், விவசாய மூலப்பொருள் உற்பத்திப் பெருக்கு மற்றொரு புறமும். இவையிருந்தால்தான் வெளி நாடுகளிலிருந்து பண்ட மாற்றுதல் மூலமாக போதிய யந்திரங்களைப் பெற்று தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட முடியும்.

இதுவே நாசர் நம்பிக்கை. எகிப்து மக்களும் இப்படித்தான் நினைக்கிறார்கள்.

இந்த நினைப்பிலிருந்துதான் அஸ்வான் அணைக்கட்டுத் திட்டம் உருவாகியது. இது ஒரு மிகப் பிரம்மாண்டமான திட்டம். எகிப்து பொருளாதாரத் திட்டத்தில் தலைமை ஸ்தானம் வகிப்பது.

எகிப்து நாட்டுக்கு உயிர்நாடி நைல் நதி. நைல் நதியில் அஸ்வான் பிரதேசத்துக்கு அருகிலுள்ள சலாப்ஷா என்னுமிடத்தில் கிட்டத்தட்ட 300 அடி உயரத்திற்கு ஒரு அணை கட்டுவதே இந்தத் திட்டம். இத்திட்டத்தைக் கட்டி முடித்தால் பல்லாயிரக் கணக்கான எகிப்து மக்களுக்குப் பல வருஷங்களுக்கு வேலை கிடைக்கும்; ஏற்கனவேயுள்ள விளை நிலத்துடன், கூடுதலாக, புதிதாக, 20 லட்சம் ஏகரா நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இன்றுள்ள மின்சார உற்பத்தியை இரட்டிப்பாக்க முடியும்.

ஆனால் இத்திட்டத்திற்கு மட்டும் 100 கோடி டாலருக்குமேல்- அதாவது 400 கோடி சவரன், அதாவது சுமார் 600 கோடி ரூபாய்- மூலதனம் வேண்டியிருக்கிறது.

இந்த மூலதனத்திற்காக எகிப்து அமெரிக்காவிடம் உதவி கோரியது. அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள உலக பாங்கியையும் கடன் கேட்டது. அமெரிக்கா உதவி செய்வதாக வாக்களித்தது, சென்ற இரண்டாண்டு காலமாக பேச்சுவார்த்தைகளும், பேரங்களும் நடந்துகொண்டேயிருந்தன. சில மாதங்களுக்கு முன்புதான் உலக பாங்கியின் செயற்குழு ஒன்று எகிப்துக்கு விஜயம் செய்து, திட்டத்தைப் பரிசீலனை செய்தது. எகிப்து பொருளா

தாரத்தினுல் இவ்வளவு பெரிய சுமையைத் தாங்க முடியுமா என்றும் விசாரித்துத் தெரிந்துகொண்டது. முடிவில் திட்டம் சரிதான், பொருளாதார நிலைமையும் நன்ருய்த்தானிருக்கிறது என்று நாசர் சர்க்காரிடம் சொல்லிச் சென்றது.

அமெரிக்கா உதவியளிக்கத் தயாராகிவருகிறது என்று கேட்டவுடன், பிரிட்டனும், பிரான்சும், ஜெர்மனியும் தம் பங்குக்கு உதவி புரிவதாக வாக்களித்தன.

உதவி எப்போது வரும் வேலை எப்போது ஆரம்பிக்கலாம், என்று ஆவலோடு எகிப்து காத்துக் கொண்டிருந்தது.

எகிப்தினுடைய ஆவலைப்பற்றி மேலைய நாடுகளுக்கு என்ன கவலை? அவர்கள் எண்ணம் வேறு திசையில் சென்றது. அஸ்வான் அணைக்கு உதவிபுரிவதாக எகிப்திக்கு ஆசை காட்டி எகிப்தினுடைய உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் தம்மைப் பின்பற்றும்படி செய்வதற்கு முயற்சித்தார்கள் ஆனுல், நாசர் சர்க்கார் சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றத் துணிந்துள்ளது என்பதை நடைமுறை நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

இவற்றை ஏகாதிபத்தியவாதிகள் வரவேற்பார்களா? உதட்டளவில் "சுதந்திரம்" என்ற பேச்சு; ஆனுல் செய்கையில்— ஆதிக்கம்தானே அவர்கள் குறிக்கோள்.

உலக பாங்கியின் தலைவர் யூஜீன் பிளாக் சில மாதங்களுக்கு முன்பு எகிப்துக்கு வந்தார். மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினுர். எகிப்து பொருளாதாரம் நன்ருய்த்தானிருக்கிறது என்று நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தார். உதவியளிப்பதாகவும் வாக்களித்தார்.

ஆனுல்—

ஒரே ஒரு நிபந்தனை மட்டும்!

அது என்ன?

நாசர் வார்த்தைகளிலேயே அந்த நிபந்தனையைச் சொல்வோம்:—

"எனது ஸ்தானத்தில் (எகிப்திய ஜனுதிபதியின் ஸ்தானத்தில்) அவர் உட்கார்ந்துவிட வேண்டும்" என்பதே!

எகிப்தின் குடுமி உலக பாங்கியின் கையில்; உலக பாங்கியின் குடுமி அமெரிக்காவின் கையில்! எனவே அமெரிக்காவே எகிப்தை ஆளவேண்டும். எகிப்துக்கு எது நல்லது, எது கெட்டது, என்பதை யெல்லாம் அமெரிக்கப் பணமூட்டைகளே முடிவு செய்ய வேண்டுமாம். அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அவர்களே பரிசீலித்து மேற்பார்வை பார்ப்பார்களாம். அதுமட்டுமல்ல, கடன் தொகையும் முழுசாகத் தர மாட்டார்களாம். ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாகக்

கொடுப்பார்களாம். இதற்கு அர்த்தமென்ன? எகிப்து எதிர் காலத்தில் அமெரிக்காவிடம் நல்ல பிள்ளையாக நடக்கத் தவறுமே யானால், உடனே அமெரிக்க உதவி வற்றிப்போகும் அதாவது, அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்துக்கும், எகிப்துக்கும்—நித்ய கண்டம், பூர்ண ஆயுசு! ஆதிக்கம் செலுத்துவதற்கு இதைவிட நேர்த்தியாக யாரால் திட்டம்போட முடியும்?

அதுமட்டும்தானா? எகிப்து சுதந்திரத்தை எவ்வளவு மலி வான சரக்காகக் கருதினார்கள் தெரியுமா? கேளுங்கள்.

அஸ்வான் திட்டத்துக்கு, இந்த நிபந்தனைகளையெல்லாம் ஒப்புக் கொண்டால், மேலைய பணக் கொழுப்பர்கள் கொடுக்க மனமிரங்கி யுள்ளதெல்லாம் 27 கோடி டாலர் மட்டுமே. மிச்சம் **73 கோடி டாலர்** எகிப்தே உள்நாட்டில் திரட்டிக்கொள்ளவேண்டும். அதாவது செலவில் கால்வாசிதான் கொடுப்பார்கள்; அதற்காக அடிமைச் சீட்டு எழு திக் கொடுக்கவேண்டும், நாசர்! அந்த 27 கோடியையும் கொஞ் சம் கொஞ்சமாய்த்தான் கொடுப்பார்கள்! நிபந்தனைப்பட்டியல், இதோ :—

— எகிப்து பொருளாதாரத்திட்டத்தை உலக பாங்கி அங்கீகரிக்க வேண்டும்;
— எகிப்து சர்க்கார் செலவுகளை, செலவினங்களை, உலக பாங்கி கண்காணித்துக் கட்டுப்படுத்த உரிமை வேண்டும்;
— எகிப்து அந்நிய நாடுகளில் வேறு கடன் வாங்கக் கூடாது;
— பாங்கியின் சம்மதமின்றி இதர நாடுகளுடன் (செக்கோஸ்லோ வாகியாவுடன் செய்துகொண்டதுபோல) வியாபார ஒப்பந் தங்கள் செய்யலாகாது;
— காலப்போக்கில் உலக பாங்கி ஏதாவது புதிய நிபந்தனைகளைப் போட்டால் அவற்றையும் எகிப்து ஏற்கவேண்டும்.

இவையெல்லாம் உலக பாங்கியின் காருண்யத்தைக் காட்டு கின்றனவாம். அதன் பெயர், உதவி—அல்லவா?

இந்த நிபந்தனைகளை, இந்த உதவியை, யார் ஒப்புக்கொள் வார்கள்?

நாசர் அலெக்ஸாந்திரியா நகர்க்கூட்டத்தில் கர்ஜித்தார் :—

"இந்த நிபந்தனைகளை யெல்லாம் நாம் ஐயத்திற்கிடமின்றி நிராகரித்தோம். ஒரு சில கோடி டாலருக்காக எங்கள் நாட்டை விற்கமாட்டோம் என்று அவர்களிடம் கூறினோம்." (26-7-56)

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால், கைகொட்டிச் சிரியாரோ—என்பது புதிய ஆசியாவின் வாக்கு, புதிய ஆப்ரிக்க அராபிய மாநிலங்களின் வாக்கு!

நிபந்தனைகளை நிராகரித்தவுடன், அமெரிக்கா திடீரென்று ஜூலை மாதம் 19ம் தேதியன்று அஸ்வான் அணைக்கட்டுத் திட்

டத்துக்கு உதவ முடியாது என்று பிரகடனம் செய்தது. எகிப்து பொருளாதாரம் நோய் கொண்டிருக்கிறது, இதைத் தாங்காது, என்று டல்லஸ் புதிய புதிய கண்டுபிடிப்புகளை அவசர அவசரமாக உலகுக்கு அறிவித்தார். உலக பாங்கியின் தலைவரும் டல்லஸ் புளுகை ஆதரித்தார்

பாக்தாத் ஒப்பந்தத்தின் பிரம்மாவாகிய பிரிட்டனுக்கு உச்சி குளிர்ந்துபோயிற்று. டல்லஸை ஈடன் ஒரு நிமிஷ தாமதமுமின்றி ஆமோதித்தார். பிரான்சு பக்கமேளம் வாசிக்க வெகு நேரமாக வில்லை.

“நாசர்?—மகா கர்வி—தன்னைப் பெரிதாக நினைத்துக் கொள்கிறார்—அவரை வைக்கவேண்டிய இடத்தில் வைத்துவிட்டோம்” என்று அமெரிக்க சர்க்கார் வட்டாரங்கள் பகிரங்கமாகக் கூறின. கும்மாள மடித்தன.

வியக்கத்தக்க விதத்தில் டல்லஸ் அரசியல் சதுரங்கம் ஆடுகிறார் என்று அமெரிக்கப் பத்திரிகை டைம் உச்சிமேல் வைத்து மெச்சியது. முரடன் நாசர் எகிப்தைக் கெடுக்கிறார், நாசர் கொள்கை தோல்வியுற்றதைக் கண்டு எகிப்து மக்கள்—குறிப்பாக எகிப்து விவசாயிகள்—கோபம்கொண்டு, நாசரைப் பதவியிலிருந்து நீக்குவார்கள், வேறொரு ஆட்சி வரும். அரபு நாடுகளின் வாலாட்டமும் நின்றுபோகும். சுதந்திரக் கொள்கைகள், சுதந்திர இயக்கங்கள், பாண்டுங் மகாநாடுகள், நாசர்—நேரு டிட்டோ சந்திப்புகள்—எல்லா “தலைவலிகளும்” தொலைந்துவிடும். சோவியத் யூனியனுக்கு எதிராக அரபு நாடுகளை ஒரு போர்த்தளமாக அமைக்கலாம். மத்திய கிழக்கில் வளர்ந்து வரும் சோவியத் யூனியனின், சோஷலிஸ்ட் நாடுகளின், செல்வாக்கு அஸ்தமித்துவிடும்......

எத்தனை கனவுகள்! எத்தனை ஆசைகள்!

## அத்தியாயம் 4

# ஆதிக்கத்துக்கு அடி

வீண் கனவுகள்! வெற்று ஆசைகள்!

டல்லஸ் உலகை ஆட்டிப்படைக்கும் பிரம்மா அல்ல! கனவுகள் கனவாகவே போய்விட்டன.

அமெரிக்க உதவி மறுக்கப்பட்டவுடன், சோவியத் யூனியன் வெளிநாட்டு மந்திரி ஷெபிலாவ் ஒரு அறிவிப்புத் தந்தார். எகிப்து கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் சோவியத் யூனியன் அஸ்வான் அணைக் கட்டுத் திட்டத்துக்கு உதவத் தயார், தொழில் வளர்ச்சிக்கு உத

வத் தயார் என்று பிரகடனம் செய்தார். நிபந்தனையற்ற உதவி தருவோம் என்றார்.

பேரிடி விழுந்தது! ஏகாப்திய முகாமிலே கிலி! என்றாலும், இது வெத்துவேட்டு, சோவியத் யூனியனால் இவ்வளவு உதவி யளிக்க முடியாது—என்று வாஷிங்டன் மூஞ்சூறுகள் முணு முணுத்தன.

எகிப்து சர்க்கார் பொருளாதாரக் குழு மாஸ்கோவுக்குச் சென்றது. நாசர் பயப்படவில்லை. எகிப்து பீதியடையவில்லை.

பிரியோனிக்கு நாசர் விஜயம் செய்வதையும் ஏகாதிபத்யவாதி களால் தடுக்கமுடியவில்லை. வழக்கம்போல, நாசர் தமது சுதந் தரக் கொள்கையை அனுசரிக்கலானார். நாடு திரும்பினார்.

எகிப்து நாடு நிகழ்கால எதிர்கால நிலைமைகளை ஒரு தட வைக்கு இரண்டு தடவை சீர்தூக்கிப்பார்த்துக்கொண்டது. ஒன்று, இரண்டு, மூன்று......ஏழு நாட்கள்!

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

எண்ணித் துணிந்தார் நாசர். ஜுலை 26-ம் தேதியன்று அலெக்ஸான்டிரியா நகரில் நடந்த பிரம்மாண்டமானதொரு பொதுக் கூட்டத்தில் எகிப்து சர்க்கார் முடிவை நாசர் அறிவித் தார் அமெரிக்க உதவிபற்றியும், அவற்றின் நிபந்தனைகளையும், விளக்கிப் பேசினார். மேலைய நாடுகள் அரசியல்—பொருளாதார வகைகளில் எகிப்தை அடிமைகொள்ள முயற்சிப்பதை விரித்து விளக்கி வைத்தார். எகிப்து கடைத்தேறும் வழி எகிப்துக்குள் ளேயே யிருக்கும் அந்நிய மூலதனப்பிடிப்பை யொழிப்பதே என்ற வகையில் சூயஸ் கால்வாய் தேசியச் சொத்து ஆக்கப்பட்டது என்று பிரகடனம் செய்தார்.

கூடியிருந்த மாபெருங் கூட்டத்தில் சந்தோஷ ஆரவாரம் வானைப் பிளந்தது. மறுநாள் கெய்ரோ நகரம் மக்களின் உற் சாக மிகுந்த ஆர்ப்பாட்டத்தின் அணைப்பிலே கட்டுண்டது. 'பிரிட் டிஷ் ஆதிக்கம் ஒழிக! அமெரிக்க ஆதிக்கத்தை அனுமதியோம்! நாசர், நேரு, டிட்டோ, சூயன்லாய் நீடூழி வாழ்க!'' என்ற கோஷங் கள் எகிப்தைக் குலுக்கின.

பெரும்பாலும் பிரிட்டிஷ்—பிரெஞ்சு பணமூட்டைகளின் பிடிப் பிலிருந்த பழைய சூயஸ் கால்வாய் கம்பெனியின் ஆபீசை மூடிச் சீல் வைத்தார்கள். கட்டடத்தின் மீது எகிப்து தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது கட்டடத்தின் முன்பு டாங்கிகள் நிறுத்தப் பட்டன.

நாசர் மேலும் அறிவித்தார்: பழைய கம்பெனியின் பங்கு தார்களுக்கு பூர்ணமான நஷ்டஈடு அளிப்போம், தேசியமயமாக்

கப்பட்டதற்கு முந்திய நாளன்று உலகப் பங்கு மார்க்கெட்டில் நிலவிய விகிதப்படி பழைய சூயஸ் கம்பெனி பங்குகளுக்குப் பூரண மாக நஷ்டஈடு கொடுக்கப்படும் என்ருர்.

கப்பல் போக்குவரத்து பற்றியும் கவலேப்படவேண்டியதில்லே என்று நாசர் தெரிவித்தார். வழக்கம்போல் எல்லா நாட்டுக் கப்பல்களும் கால்வாய் வழியே போய் வரலாம் என்று உறுதி மொழி யளித்தார், இது விஷயத்தில் 1888-ம் ஆண்டு செய்து கொண்ட கான்ஸ்டான்டிநோபிள் ஒப்பந்தத்தின் விதிமுறைகளேத் தொடர்ந்து பின்பற்றுவோம் என்று 27-7-56ல் வாக்குறுதி யளித் தார்.

மற்றபடி, சூயஸ் போக்குவரத்து மூலம் கிடைக்கும் பணத்தை தேசியப் பொருளாதார புனருத்தாரணத்துக்கு எடுத்துக் கொள் வோம். உள்நாட்டில் மூலதனம் சேர்த்து அஸ்வான் அணேக் கட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அது ஒரு வழி என்று எகிப்திய மக்களுக்கு அறிவுறுத்தினர்.

நாசர் நடவடிக்கையும், விளக்கமும் முற்றிலும் சட்ட ரீதி யானவை, சர்வதேச சட்டத்துக்கும் நடைமுறைக்கும் உகந்தவை, காரிய சாத்தியமானவை. ஏதோ, ஆத்திரத்தில் ரோஷத்தில் பிறந்த நடவடிக்கையல்ல. அந்நிய மூலதனத்தைத் தேசியச் சொத்தாக்கினுல்தான் கோடானு கோடியாக வெளியே செல்லும் லாபக் கொள்ளேகளே நிறுத்தலாம், உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகைகள் கிடைக்கும். இது யதார்த்த நிலேமை கற்பித்த பாடம், நிர்ப்பந்தித்த ஒரே பாதை

சூயஸ் கம்பெனி அடித்த கொள்ளேயும், சூயஸ் கால்வாய் அந்நியர் கையில் சிக்கி எகிப்தை ஆட்டி வைத்த கதையும், இங்கு சிறிது கவனிக்கத் தக்கது.

## அத்தியாயம் 5

# கால்வாய் வரலாறு

சூயஸ் கால்வாய் எகிப்து நாட்டுக்குள் இருக்கிறது. எகிப் துக்கு வடக்கேயுள்ள மத்தியதரைக் கடலேயும், கீழ்ப்புறமுள்ள செங்கடலேயும் இணேக்கும் கால்வாய் அது. இந்தக் கால்வாய் வெட்டப்படுவதற்கு முன்பு, முதலாளித்துவ வளர்ச்சியுற்றுவரும் மேலேய நாடுகள் கிழக்கத்திய நாடுகளுக்கு வரவேண்டுமானுல் ஆப்ரிக்கா கண்டத்தை வலம்வந்து, நன்னம்பிக்கை முனேயைத் தொட்டுவிட்டுத் தான் வரவேண்டும். இந்தியாவுக்கு முதன் முத லில் (1498.ம் ஆண்டில்) வந்த போர்த்துகீஸியர் வாஸ்கோட காமா

இவ்வழியே தான் வந்துசேர்ந்தார். இப்பிரயாணத்துக்கு ரொம்ப காலம் பிடிக்கும், கப்பல் செலவு அதிகம், சூயஸில் கால்வாய் வெட்டினுல் நமக்கு எவ்வளவோ லாபமாயிற்றே என்று அவை கருதின. பிரிட்டனை எதிர்த்துப் போராடிவந்த நெபோலியனும் இப்படித்தான் கணக்கு போட்டான். ஆனுல் நெபோலியன் யுத்தத்தில் தோற்றுப் போனுன். அதன் பிறகு பெர்டினென்ட் டி லெஸப்ஸ் என்கிற பிரெஞ்சு என்ஜினீயர் இந்தக் கால்வாய் வெட்டத் துணிந்தான் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் ஒருகால்வாயை வெட்டியிருந்தனர் என்பதால்அவருக்கு நம்பிக்கை பிறந்தது. பிரெஞ்சு முதலாளிகள் அவர் திட்டத்தை ஆதரித்தனர். ஆனுல் பிரிட்டன் எதிர்த்தது; அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் டிஸ்ரேலி குறுக்கே நின்ருர். சஹாரா பாலைவனத்திலிருந்து மணற்காற்று வீசி கால்வாயை மணல்மேடாக்கிவிடும் என்பது அவரது சாக்கு. ஆனுல் அந்தரங்கத்தில் டிஸ்ரெலியினுடைய பயமெல்லாம் பிரிட்டிஷ் கடலாதிக்கத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் ஆபத்து வந்துவிடுமே என்பதே. பிரிட்டிஷ் எதிர்ப்பையும் மீறி 1859ம் ஆண்டில் சூயஸ் கால்வாய்க் கம்பெனி தோன்றியது. பத்தாண்டுகளில் கால்வாய் கட்டி முடிந்தது.

சூயஸ் கால்வாய் நீளம் 103 மைல்; அகலம் 200-300 அடி; ஆழம் 34 அடி. 1886ல் கால்வாய் வழியே கப்பல் செல்ல 36 மணி நேரம் பிடித்தது. இப்பொழுதெல்லாம் 16 மணி நேரம் போதும்.

கால்வாய் வெட்டுவதற்கு எகிப்து பட்ட துன்பமும் செய்த தியாகமும் கொஞ்சநஞ்சமல்ல. ஒரு லட்சத்து 20 ஆயிரம் எகிப்து மக்கள் கால்வாய் வெட்டும் வேலையில் உயிரிழந்தனர். இன்னும் பல்லாயிரக் கணக்கான எகிப்தியர்கள் பலவந்தப்படுத்தப்பட்டு அடிமைகள்போல வேலை வாங்கப்பட்டார்கள். இந்தப் பயங்கரமான கதையை பண்டித நேரு தமது "உலக சரித்திரம்" என்ற நூலில் விவரித்துள்ளார்.

சூயஸ் கம்பெனியின் துவக்கத்தில் பிரெஞ்சு மூலதனமும் அதிகமிருந்தது. எகிப்திய அதிபரிடம் சுமார் சரிபாதி பங்கு கால்வாய் வெட்டப்பட்டதனுல் இந்தியாவுக்குச் செல்லும் மார்க்கம் குறுகியது. தன் சாம்ராஜ்யத்துக்கு சூயஸ் கால்வாய் ஒரு ஜீவநாடி என்பதை பிரிட்டன் உணர்ந்தது. எகிப்திய அதிபருக்கு 5 கோடி பவுனை அக்கிரமான வட்டிக்குக் கடன் கொடுத்தது. இந்தக் கடனில் மூன்றிலொரு பங்கை லண்டன் பண முதலாளிகளே கமிஷனுகவும் செலவாகவும் பறித்துக் கொண்டனர். மேலும் எகிப்துக்குக் கடனுகக் கொடுத்த தொகையில் பெரும் பகுதி ஆங்கிலேய கண்டராக்டர்களின் லாபமாகத் திரும்பவும் லண்டனுக்கே வந்து சேர்ந்தது. உதாரணமாக அலெக்ஸாண்ட்ரியா துறை

முகத்தைக் கட்டுவதற்கு எகிப்திய சர்க்கார் 25 லட்சம் பவுன் கொடுத்தது. இதில் இங்கிலீஷ் கண்ட்ராக்டர்கள் 11 லட்சம் பவுன் லாபமாகப் பெற்றுச் சென்றனர். 1876ல் எகிப்துக்கு 8 கோடி பவுன் கடனிருந்தது. இதற்கு வருஷ வட்டி மட்டும் 60 லட்சம் பவுன். 80 லட்சம் மக்கள் வாழ்ந்த எகிப்தில், சர்க்கார் மொத்த வருமானமே 100 லட்சம் பவுன்தான். இந்நிலையில் வட்டியைக் கொடுப்பது எப்படி? கடனையடைப்பது எப்படி? எகிப்து அதிபர் சூயஸ் கால்வாய் கம்பெனியில் எகிப்து சர்க்காருக்கிருந்த சுமார் சரிபாதிப் பங்குகளை விற்கத்துணிந்தார்—கடன் அடைக்க. வாய்த்தது சமயம் என்று டிஸ்ரேலி சரச விலைக்கு (பங்குக்கு 23 பவுன்) வாங்கிப்போட்டார். பிறகு, பிரெஞ்சு முதலாளிகளிடமும் பிரிட்டன் பங்குகளை வாங்கியது இவ்வாறுதான் சூயஸ் கம்பெனியில் மூத்த பங்காளியாயிற்று. கம்பெனியில் கோலோச்சியதுமட்டுமல்ல. 1882ல் போர்க்கப்பலையனுப்பி எகிப்தை ஆக்ரமித்து அடக்கவும் முன்வந்தது. தனது கைப்பாவையாக எகிப்து அதிகாரியை ஆக்கியது. எகிப்து சுதந்திரமும் பறிபோயிற்று

பிறகு கொள்ளையோ கொள்ளை! ஆண்டுக்கு 10 கோடி டாலர் லாபம் வருகின்றதென்றும் அதில் 7 கோடி பிரிட்டனுக்குப் போகிறதென்றும் எகிப்துக்கு மிஞ்சுவதெல்லாம் 30 லட்சம் டாலர் தானென்றும் நாசர் தெரிவிக்கிறார்.

இந்தக் கொள்ளையை நிறுத்தினால் எகிப்து பொருளாதாரம் தலைதூக்கும், அது ஒன்றே வழி என்பதாலேயே நாசர் சூயஸ் கம்பெனியைத் தேசியவுடமையாக்கினார்.

## அத்தியாயம் 6

# பித்தலாட்டப் பிரச்சாரம்

தேசியவுடமைப் பிரகடனம் செய்யப்பட்டதும் ஏகாதிபத்திய ஜடாமுனிகள் சாமியாட்டம் போட்டு அட்டகாசம் புரிந்தனர்.

பிரிட்டிஷ் துருப்புக்கள் எகிப்துக்கருகேயுள்ள சைப்ரஸ் தீவுக்கு அனுப்பப்பட்டன; பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் எகிப்துக்கருகில் கொண்டு செல்லப்பட்டு குவிக்கப்பட்டன. நாசர் ஆக்கிரமிப்பாளர். அவரை அடக்க என்ன வேண்டுமானாலும் செய்வோம், பலாத்காரத்தையுபயோகிக்கத் தயங்கமாட்டோம் என்று பிரிட்டனும் பிரான்சும் கொக்கரித்தன. பலாத்காரம் உபயோகிக்க அவற்றிற்கு உரிமையுண்டு என்று நீதி வழங்கினார் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர்.

நாசர் நடவடிக்கையில் குற்றங்குறை கண்டுபிடிக்க ஏகாதிபத்யங்களுக்கு லவலேசமும் சாக்குப்போக்கு கிடையாது. எனவே

விரிந்த அளவில், கட்டுப்பாடான முறையில், என்றுமே கண்டிராத ஆக்ரோஷத்துடன் உருட்டல் மிரட்டல் நடவடிக்கையையும், தீய பிரச்சாரத்தையும் கைக்கொண்டார்கள். பகிரங்கமாக எகிப்தை மிரட்டி நடவடிக்கை எடுத்தார்கள்.

சூயஸ் கால்வாய்க் கம்பெனியைத் தேசியச் சொத்தாக்குவது எகிப்தின் உள்நாட்டு விஷயம். இது ஒரு அம்சம். இது ஏகாதிபத்யங்களுக்குத் தெரிந்திருக்கிற சங்கதி. ஆங்கிலோ ஈரானிய எண்ணெய்க் கம்பெனியை 1952-ல் ஈரான் சர்க்கார் தேசிய மயமாக்கியபோது, பிரிட்டன் உலகக் கோர்ட்டில் தாவாச் செய்தது. உலகக் கோர்ட் ஈரானுக்குச் சாதகமாகவே தீர்ப்பளித்தது. அது ஈரானிய அரசுரிமை, ஈரானுக்கு அப்படிச்செய்ய உரிமையுண்டு, ஐ. நா. சாசனமும் அதை அங்கீகரிக்கிறது—என்பது உலகக் கோர்ட் தீர்ப்பு. இது ஈடன், பீனே, டல்லஸ் வகையருவுக்குத் தெரியாதா? தெரியும்

அதனால்தான் உலகக் கோர்ட்டுக்குப் போய் மீண்டும் மூக்கு அறுபட அவர்கள் துணியவில்லை.

கேவலம், ரௌடித்தனம் செய்து காரியம் சாதிக்கலாம் என்று பார்த்தார்கள். நாசர் வர்ணித்தபடி "சர்வதேச கொலைகாரத் தனத்தில்" இறங்கினர்.

நீதி, நியாயம் தம் பக்கம் இல்லாததால் அவதூறுகளைப் பொழிந்து துவேஷத் தீ மூட்டலாயினர்.

நாசர், "ஆக்ரமிக்கிறார்" என்றார்கள். சூயஸ் கால்வாய் எங்கிருக்கிறது? பிரிட்டனிலா, பிரான்சிலா? பூகோளப் படத்தைப் பார்க்கட்டுமே! எகிப்து மண்ணில் கால்வாய் ஓடுகிறது. பேச்சு மூச்சு விடக்கூடாது ஆக்ரமிப்பு என்று! 1888 கான்ஸ்டான்டிநோபிள் ஒப்பந்தத்தை அப்படி அர்த்தப்படுத்தலாம் என்றால், உலகக் கோர்ட்டுக்குப் போய் முறையிடுவதுதானே? யார் வேண்டாமென்றது?

நாசர் "அநியாயக்காரர்" என்கிறார்கள். ஏன்? பூர்ண நஷ்டஈடு தருகிறோம், ஒவ்வொரு கம்பெனி பங்குக்கும் அன்றைய முழு மதிப்புக்குத் தக்கபடி துவக்கப் பங்குக்கு 76 பவுனும், சாதா பங்குக்கு 92 பவுனும் என்ற விகிதத்தில் நஷ்டஈடு தருகிறோம் என்பது நாசரின் நியாய புத்தியை, சமரசப் பண்பை, காட்டுகிறதா அல்லது துர்ப்புத்தியைக் காட்டுகிறதா? 23 பவுனுக்கு வாங்கிய ஒரு பங்கு இப்போது 76 அல்லது 92 பவுன் நஷ்டஈடு பெருகிறது! வரலாற்றின்படி இதுவரை இவர்கள் அடித்த கொள்ளைக்கு, உறிஞ்சிய இரத்தத்திற்கு, நாசர் நஷ்டஈடு தருவது என்பது சரித்திரம்காணாத தாராள புத்தி—விசாலப்பார்வை—தர்மசிந்தனை ஆயிற்றே!

நாசரின் நீதி வியக்கத்தக்கது, கேளுங்கள். 1969ல் சூயஸ் கால்வாய் கம்பெனியின் குத்தகை முடியும் என்பது ஒப்பந்த ஏற்பாடு. 1969ல் குத்தகை முடியும்போது, எகிப்து சர்க்கார் ஒரு செல்லாக் காசு கூட நஷ்ட ஈடு தராமல் சூயஸ் கம்பெனியை எடுத்து நடத்தலாம் என்பது ஒப்பந்தம். ஏதோ போனால் போகிறது, ஒப்பந்த காலத்திற்கு 12 வருடங்களுக்கு முன்பே எடுத்துக்கொள்ளுகிறோம், எனவே பூர்ண நஷ்ட ஈடு கொடுத்துக் கணக்கு தீர்ப்போம்—என்கிறார் நாசர்.

நாசர் நீதி, நாசர் நேர்மை, இப்படியிருக்க, நாசர் "கொள்ளையடிக்கும் செயலைச் செய்வதாக" பிரெஞ்சு மந்திரி பினோ பிதற்றுகிறார்.

நஷ்ட ஈடு கொடுக்கிறோம் என்பது வெறும் பேச்சு, நாசரிடம் பணமில்லை—என்கிறார்கள் ஈடன்–பினோ வகையறா. ஒரு சிறிய கணக்கு இந்தப் பெரிய பாங்கு முதலாளிகளுக்குப் புரியவில்லையாம்! நஷ்ட ஈடுத் தொகை 6½ கோடி பவுன். அவ்வளவே. ஆனால் பிரிட்டனில் மட்டும் எகிப்து கணக்கில் எகிப்துக்குச் சொந்தமாக 13 கோடி பவுன் வரவிலிருக்கிறது. நாசர் நஷ்ட ஈடு கொடுக்க முடியாதா?

இதே பிரிட்டன்தான் எகிப்துக்குச் சேர வேண்டிய 11 கோடி பவுன் ஸ்டர்லிங் நிதியை எகிப்துக்குப் போகாதபடி முடக்கி வைத்திருக்கிறது. யார் கொள்ளையடிக்கிறார்கள், யார் ஆக்ரமிக்கிறார்கள்? எகிப்து, பிரட்டனை நம்பி பணத்தை லண்டன் கணக்கில் வைத்திருந்தது. பிரிட்டன் நம்பிக்கைத் துரோகம் செய்தது. உலக பண விவகார வட்டாரத்தில் பழகுவதற்கு யோக்கியதையற்றது என்று தன்னைக் காட்டிக் கொண்டது.

உண்மையில் இவர்களுடைய குறிக்கோள் பின்வருமாறு:—

(1) தேசிய உடமையாக்குவதை இராணுவ மிரட்டல் மூலமாக, பலாத்காரத்தின் மூலமாக, தடுக்க வேண்டும். ஈரானில் முசாதேக் சர்க்காரைக் கவிழ்த்த மாதிரி நாசரைக் கவிழ்க்க வேண்டும். சூயஸ் கம்பெனிச் சுரண்டல் நீடிக்க வேண்டும்.

(2) இதன் மூலம், பிற அரபு நாடுகள், ஆசிய நாடுகள் அந்நிய எண்ணெய்க் கம்பெனிகளையும், எண்ணெய்க் குழாய் ஸ்தாபனங்களையும், இதர பராதீனச் சொத்துக்களையும், தேசிய உடமையாக்காதபடி மிரட்டி வைத்துவிட வேண்டும்.

(3) மத்திய கிழக்கு நாடுகளை அடிமையாக்கிப் பிற்பட்ட நிலையிலேயே வைத்து, தமது சாம்ராஜ்யச் சுரண்டலைத் தொடர்ந்து நடத்துவது.

(4) மத்திய கிழக்கு நாடுகளை யுத்த தளங்களாக மாற்றி, தமது இராணுவக் கூட்டணிகளில் பிணைத்து வைப்பது.

இதனுல்தான் தேசியமயமாக்கும் அரசுரிமையைச் சர்வதேசச் சட்டப்படி தாக்க முடியாது என்பதையுணர்கின்றனர். எனவே, பிரச்சினையை மழுப்பி, மக்களைக் குழப்பத்திலாழ்த்தும் நோக்குடன் அதை மற்றெரு விஷயத்துடன் முடிச்சுப் போடுகிருர்கள்.

அந்த மற்றெரு பிரச்சினை என்ன? எல்லா நாட்டுக் கப்பல்களும் சூயஸ் கால்வாய் வழியே போய் வரும் சுதந்திரம் என்பதே அது.

எகிப்து கையில் சூயஸ் கால்வாய் இருந்தால் இந்தப் போக்குவரத்து சுதந்திரம் பறிபோகும் என்று கூச்சலிடுகின்றனர். இதன் மூலம் உலக மக்களைத் திரட்டி, இதர சர்க்கார்களை எகிப்துக்கு விரோதமாக ஒன்று சேர்த்து, எகிப்து அரசுரிமையைச் சிதைக்க வழி தேடலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர்.

நாசர் இந்த சூழ்ச்சியை முன் கூட்டியே அறிந்திருந்தார் போலும். கால்வாய்ப் போக்கு வரத்து சுதந்திரத்துக்கு எவ்வித பங்கமும் ஏற்படாது; பழைய ஒப்பந்தத்தை பூரணமாகக் கவுரவித்து எகிப்து சூயஸ் கால்வாயை நிர்வகிக்கும். கப்பல்கள் போய்வரட்டும்; கப்பல் கட்டண விகிதமும் மாருது; ஆனல் கப்பல் கட்டணத் தொகை மட்டும் எகிப்தைச் சேரும். அதையும் லண்டன், பாரிஸ் பாங்குக் கணக்கில் செலுத்தலாம் என்று ஆரம்பத்திலேயே ஜுலை 27-ம் தேதி யன்றே தெட்டத் தெளிவாகக் கூறினர்.

ஏகாதிபத்ய வாதிகள் இதைக் காதில் வாங்கிக் கொள்ளத் தயாரில்லை.

அது எப்படி ஒரு தனி நபரிடம் ஒரு தனி சர்க்காரிடம், சர்வ தேச முக்யத்துவமுள்ள சூயஸ் கால்வாயை விட்டுவைப்பது? என்கிருர்கள் இதற்கு நாசர் சொல்கிருர்:—‘ 1888-ம் வருட ஒப்பந்தத்தையே பார் எகிப்துதான் இதுவரை சூயஸ் காலவாயை நிர்வகித்து வந்தது. எகிப்து இனி மேலும் நிர்வகித்து வருவதில் என்ன ஆட்சேபம்? எகிப்தில் பிரிட்டிஷ் படைகள் இருக்கும்போது தான் இஸ்ரேல் கப்பல்களுக்குத் தடை விதித்தோம், பிரிட்டனே, மற்ற நாடுகளோ அன்று பேச்சு மூச்சுவிடவில்லையே!” என்று கேட்கிருர். 1954-ம் ஆண்டு எகிப்துடன் பிரிட்டன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்திலும் சூயஸ் கால்வாய்மீது எகிப்துக்குள்ள அரசுரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகிருர் நாசர். இதற்குப் பதில் கிடையாது. நாசர் பாசிஸ்ட், சர்வாதிகாரி, கொள்ளைக்காரன் என்று ஈடன்—பீனே வசைமாரி பொழிகின்றனர்.

பனமா கால்வாய் மட்டும் வேற்று நாடான அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருக்கலாம். ஆனல் சூயஸ் கால்வாய் சொந்த நாட்டுச் சர்க்கார் நிர்வாகத்தில் இருக்கக்கூடாது—டல்லஸ் அடித்துச் சொல்லும் அறவழி இதுதான்.

உண்மையில், நிர்வாகத்தைப்பற்றியல்ல, அவர்கள் கவலை. அடிக்கிற கொள்ளை லண்டனுக்கும் பாரிசுக்கும் போய்க்கொண்டிருந்த வரையில் சூயஸ் நிர்வாகம் எகிப்து அரசுரிமைக்குக் கட்டுப்பட்டிருக்கலாம். கொள்ளைக்கு முற்றுப் புள்ளியிட முனைந்தால்தான் இந்தக் கேள்வி பிறக்கிறது!

சூயஸ் கால்வாய்மூலம் கிடைக்கும் வருமானத்தை அஸ்வான் திட்டத்துக்கு எடுத்துக்கொண்டால் கால்வாய் மராமத்து சீரழியும், சூயஸ் கால்வாய் மண்மூடிப் போகுமே – என்பது ஏகாதிபத்ய வாதிகளின் முதலைக் கண்ணீர். இது வீண் புரளி. சூயஸ் கால்வாயை நல்ல நிலைமையில் வைத்து வந்தால்தான் வருமானமும் வந்து கொண்டிருக்கும்; வருமானம் வரவர, அஸ்வான் அணைக் கட்டுத் திட்டமும் முன்னேறும் என்பது நாசருக்குத் தெரியாதா?

அது இருக்கட்டும். 80 ஆண்டுகளாய்க் கொள்ளையடித்த இவர்கள் கால்வாயை மராமத்துசெய்து நவீனப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஒன்றுமில்லை என்று குற்றஞ் சாட்டுகிறார், நாசர். அந்தக் குற்றச்சாட்டுக்கு இதுவரை ஈடனோ, பீனோவோ, வெளியேற்றப்பட்ட பழைய கம்பெனியோ, எந்தப் பதிலும் தரமுடியவில்லை.

கால்வாய்ப் போக்குவரத்துபற்றி இவ்வளவு கரிசனத்துடன் பேசும் இவர்கள் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச்செய்யக் கால்வாய்க் கப்பலோட்டிகளைச் சொந்த நாட்டுக்கு வாபஸ் வாங்குவது ஏன்?

உலகுக்குப் பதில் சொல்லவே முடியாது ஏகாதிபத்யவாதிகளால். அதனால் துர்நடவடிக்கைகளில் ஆரம்பத்திலிருந்து இறங்கி, நாசகாரச் சதி மூட்டைகளைத் தொடர்ந்து அவிழ்த்து விட்டனர்.

ஏகாதிபத்ய வாதங்களை நிராகரித்து இந்திய சர்க்காரும், இலங்கையும், இந்தோனீசியாவும், அரபுலீக் நாடுகளும் எகிப்தை ஆதரித்தன. அகில இந்திய சமாதானக் கவுன்சில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, இதர ஜனநாயகக் கட்சிகள் அனைத்தும் நாசர் தேசியவுடமை நடவடிக்கையை ஆதரித்து, ஏகாதிபத்யப் போக்குகளைக் கண்டித்தன.

## அத்தியாயம் 7

# வல்லான் வகுத்ததே வாய்க்கால்!

ஏகாதிபத்யங்கள் சட்டை செய்யவில்லை. சூயஸ் கால்வாய் விஷயத்தில் செயற்கையாக ஒரு நெருக்கடி உண்டாக்கினார்கள்.

ஆர்ப்பாட்டமாக இராணுவங்களைத் திரட்டி எகிப்துக்கு அருகாமையில் குவித்தார்கள். எகிப்திலுள்ள பிரிட்டிஷ் பிரெஞ்சு

VG77 N56
TAMIL NADU ARCHIVES LIBRARY No. 11877

பிரஜைகளைப் "பாதுகாப்பதற்காக" இது அவசியம் என்றார்கள். 1882-ல் செய்ததுபோல எகிப்தை 1956லும் மிரட்டி ஒடுக்கலாம் என்று பார்த்தார்கள்.

பின்பு, எகிப்துக்குச் சொந்தமான ஸ்டர்லிங் மிச்சத்தை பிரிட்டிஷ் சர்க்கார் லண்டனில் முடக்கிவிட்டது. அமெரிக்காவும், பிரான்சும் அப்படியே செய்தன. சூயஸ் கால்வாய்க் கம்பெனியின் கணக்கிலிருந்த தொகைகளும் முடக்கப்பட்டன. அதாவது, இந்தப் பணங்களை எகிப்து உபயோகிக்கமுடியாதபடி தடுக்கப்பட்டது.

கப்பலோட்டிகளை வாபஸ் வாங்குவதாகவும் பயமுறுத்தினர்.

இவ்விரு துறைகளிலும் எகிப்தைப் பணியவைக்க முடியாமற் போகவே, சர்வதேச அரங்கிலிருந்து எகிப்தைத் தனிமைப்படுத்தி இராஜீய நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்காக, பிரிட்டனும் பிரான்சும் கூடிப்பேசி ஆகஸ்ட் 16-ம் தேதியன்று முதலாவது லண்டன் மகாநாடு கூட்டினார்கள். இதற்குத் தாங்கள் உட்பட மொத்தம் 22 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பினர்.

மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்த முறையும் சரி அழைப்பு அனுப்பிய நாடுகளின் பட்டியலும் சரி, விவாதத்திற்கு வைத்த விஷயமும் சரி—எல்லாம் 1888-ம் வருடத்திய ஒப்பந்தத்துக்கு முரணானவை என்று எகிப்தும், சோவியத் யூனியனும் சுட்டிக் கண்டித்தன.

அதிபர் நாசர், 1888-ம் ஆண்டு ஒப்பந்தப்படி எகிப்து முன் முயற்சியின் பேரில் ஒரு சர்வதேச மாநாடு நடத்தலாமென்றும், அதில் பழைய ஒப்பந்தத்தைத் திருத்தி வகுத்து சர்வதேச கப்பல் போக்குவரத்து சுதந்திரத்துக்கு உறுதி தேட முடியும் என்றும் ஆகஸ்ட் 12-ம் தேதி யோசனை வெளியிட்டார். அவற்றை மேலை நாடுகள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

சூயஸ் விஷயமாக மகாநாடு நடத்துவதென்றால் ஒப்பந்தப்படி எகிப்துதான் முன் முயற்சியெடுத்து சம்பந்தப்பட்ட பிற நாடுகளைக் கூட்டவேண்டும், அதுவும் கெய்ரோவில் கூட்டவேண்டும். இவர்கள் செய்ததென்ன ? எகிப்தைக் கலக்காமல், இதர இருவர் பேர் கூடிப்பேசிக் காரியம் செய்யப் பார்த்ததுதான். இராமனில்லாத இராமயணம்போல, எகிப்தின்றி இவர்கள் மட்டும் மகாநாட்டு விவரங்களை முடிவு செய்துவிட்டனர்.

சூயஸ் விஷயமாய்ப் பேசுவதென்றால், 1888-ம் வருடத்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எல்லா நாடுகளையும் கூட்ட வேண்டுமென்பது ஒப்பந்த ஏற்பாடு. இதன்படியும் மேலைய வல்லரசுகள் நடந்துகொள்ளவில்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத அமெரிக்காவுக்கு அழைப்பு அனுப்பினர். கையெழுத்திட்ட பல

நாடுகளுக்கு அழைப்பு அனுப்பவில்லை. தான்தோன்றித்தன மாகச் சில பல நாடுகளைப் பொறுக்கி அழைப்பு அனுப்பினர். இதைச் சோவியத் சர்க்கார் அறிக்கை துல்லியமாக விளக்கி விமர் சித்தது பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு அனுப்ப வில்லை. யூகோஸ்லாவியா புறக்கணிக்கப்பட்டது. பல புதிய ஆசிய நாடுகளும் உதாசீனம் செய்யப்பட்டன. இவையெல்லாம் 1888-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் அல்லது அவற்றின் வாரிசுகள் அல்லது சூயஸ் கால்வாயை உபயோகிக் கும் நாடுகள். இவற்றை நீக்கிவிட்டு ஏற்கனவே மேலைய நாடுகள் அமைத்திருந்த வட அட்லாண்டிக் கூட்டணி, பாக்தாத் கூட்டணி, தென்கிழக்கு ஆசியக் கூட்டணி, ஆகிய இராணுவ கூட்டணி களைச் சேர்ந்த நாடுகளே மெஜாரிடியாக வரவழைக்கப்பட்டன.

1888-ம் ஆண்டு ஒப்பந்தப்படி மகாநாடு கூட்டுவதென் ருல், கால்வாய்ப் போக்குவரத்து சம்பந்தமாய்த்தான் கூட் பிடமுடியும். ஆனல் மேலைய வல்லரசுகள், கால்வாய் மீது சர்வ தேசக் கட்டுப்பாடு ஏற்படுத்தும் விஷயத்திற்காகத்தான் மகாநாடு கூட்டுகிறோம் என்று அறிவித்து விட்டார்கள். அதுமட்டுமல்ல, தாங்கள் வைத்த விஷயத்தை மட்டும்தான் பிரதிநிதிகள் விவாதிக் கலாம், இதர சமாச்சாரம் எதுவும் பேசக்கூடாது என்று ஈடன் உத்தரவு போட்டார்.

இந்தியா இந்தத் கட்டுத் திட்டங்களையும், வழி முறைகளையும் ஆட்சேபித்தது; சோவியத் யூனியனும் கண்டித்தது.

ஈடன் நிலைமை ஆட்டங்கண்டது. சரி, வேறு விஷயத்தை யும் பேசலாம் என்று இறங்கி வரவேண்டியதாயிற்று. இந்தியாவும் சோவியத் யூனியனும் மகாநாட்டுக்குச் சென்றன.

எகிப்து மகாநாட்டுக்குச் செல்லவில்லை. 1888-ம் ஆண்டு ஒப்பந்தப்படி எகிப்துக்குரிய உரிமைகள் மீறப்பட்டதாலும், தேசீய வுடமையாக்கிய உள்நாட்டு விவகாரத்தை அன்னியர்கள் விவா திக்க உரிமையில்லை என்பதாலும், இராணுவ பொருளாதார நிர்ப்பந்தத்தின் கீழ் சர்வதேசக் கட்டுப்பாடு ஏற்படுத்தும் நோக் கங்கொண்டிருப்பதாலும், எகிப்து லண்டனுக்குச் செல்ல மறுத்து விட்டது. எகிப்து செய்தது சரிதான் என்ருர் நேரு.

ஆகஸ்ட் 16ம்தேதி மகாநாடு நடந்தது. இதற்குப் பகைப் புலன் என்ன? 100 பிரிட்டிஷ் விமானங்கள் மகாநாடு ஆரம்பிக் கும் அன்று காலையில்தான் துருப்புகளை ஏற்றி சைப்ரஸ்தீவுக்குப் பறந்தன. மற்ருெரு புறத்தில் அட்லாண்டிக் சமுத்திரத்தி லிருந்து பாரசீக வளைகுடா வரையுள்ள எல்லா வட ஆப்பிரிக்க, அராபிய, நாடுகளில் ஹர்த்தால்களும், பொதுவேலை நிறுத்தங் களும் ஆர்ப்பாட்டங்களும் லண்டன் மகாநாட்டை எதிர்த்து நடந்

தன. ஏகாதிபத்யங்கள் ஆக்ரமித்தால், எல்லா அரபு நாடுகளிலுமுள்ள எண்ணைக் கிணறுகளையும், சப்ளை குழாய்களையும் உடைத்துப் போடுவோம், கொரில்லாப்போர்புரிவோம் என்று அரபுநாடுகளின் தொழிலாளி வர்க்கம் சங்கற்பம் செய்யத் துவங்கியது.

இந்நிலையில். மகாநாடு லண்டனில் 7 நாட்கள் நடந்தது. மேற்கு நாடுகளின் சார்பில் டல்லஸ் சமர்ப்பித்த திட்டம் என்ன சொல்லிற்று ? சூயஸ் கால்வாய் ஒரு சர்வதேச கவுன்சில் கீழ் வைக்கப்படும். இந்தக் கவுன்சில்தான் கால்வாயை நடத்தவும் பராமரிக்கவும், கட்டணம் வசூலிக்கவும், செய்யும். இதில் எகிப்து சேர்த்துக் கொள்ளப்படும். இந்தக் கவுன்சில் ஐ. நா. வுடன் ஏதாவது ஒருவவகயில் இணைக்கப்படும். வசூலாகும் பணத்தில் ஒரு பகுதி எகிப்துக்கு வருமானமாகக் கொடுக்கப்படும். மிச்சப் பணத்தில் ஒரு பகுதி பழைய கம்பெனிக்கும் கொடுக்கப்படும், கால்வாய் பராமரிப்புக்கு பாக்கி உபயோகிக்கப்படும். இதுதான் டல்லஸ் திட்டம் என்பது

எகிப்துக்கு இரண்டு காசுகள் வீசுவதோடு சரி, சூயஸ்கால்வாய் இந்த 'சர்வதேச கவுன்சில்' ஆதிக்கத்தில் வைக்கப்பட வேண்டுமென்பதே டல்லஸ் ஏற்பாட்டின் சாராம்சம்.

புதிய விளம்பரப் பலகையின் கீழ் பழைய சூயஸ் கம்பெனி உருவெடுக்கிறது என்று இந்தக் கவுன்சில் யோசனையை சோவியத் வெளிநாட்டு மந்திரி ஷெபிலாவ் வர்ணித்தார்.

இந்த 'சர்வதேச கவுன்சில்' என்பது 'ஏகாதிபத்யங்களின் கூட்டு' என்றும், 'கூட்டுக் காலனிமுறை' என்றும் நாசர் குறிப்பிட்டு, நிராகரித்தார். லண்டனுக்குச் சென்றிருந்த நாசரின் பிரதம அரசியல் ஆலோசகர் ஆலிசாப்ரியும் டல்லஸ் திட்டத்தை நிராகரித்தார்.

இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை, சோவியத் யூனியன் இத்திட்டத்தை எதிர்த்தன.

சோவியத் பிரதிநிதி ஷெபிலாவ் நாசர் ஆகஸ்ட் 12ந்தேதி வெளியிட்ட மகாநாடு யோசனையை ஆதரித்தார். எகிப்து அரசுரிமையை ஆக்ரமித்தால் யுத்தம் ஏற்படும், அது எகிப்துடன் நிற்காது, உலக யுத்தமாக மாறும் என்று எச்சரித்தார். சர்வதேச கப்பல் போக்குவரத்து சுதந்தரம் சம்பந்தமாய் 1888ம் வருஷத்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகளை மீண்டும் எல்லா தரப்பினரையும் கொண்டு ஊர்ஜிதம் செய்யவேண்டும், கால்வாயை முற்றுகையிடக்கூடாது என்றும், கூறினர். கால்வாய் விஷயமாக சர்வதேச ஒத்துழைப்பு தேடுவதற்குரிய வழிவகைகளை, எகிப்துக்கு விருப்பமாயும் சம்மதமாயுள்ள வழிவகைகளை, மகாநாடு கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கூறினர். சகல யோசனை

களும் எகிப்து அரசுரிமைக்கு உகந்ததாய் இருக்கவேண்டுமென்றும் கூறினர். சூயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி லண்டன் மகாநாட்டுக்கோ வேறெந்த மகாநாட்டுக்கோ பேச உரிமை கிடையாது என்று வலியுறுத்தினர்.

ஷெபிலாவ் யோசனைகளை பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா நிராகரித்தன.

பின்பு, இந்தியாவின் சார்பில் திரு வி. கே. கிருஷ்ண மேனன் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தார். இது எகிப்தின் ஒப்புதலின்பேரில் சமர்ப்பித்த திட்டம் என்று மகாநாட்டு வட்டாரங்கள் பேசிக்கொண்டன. திரு. மேனன் வைத்த திட்டத்தின் சாராம்சம் பின்வருமாறு (1) கால்வாய்ப் பராமரிப்பு, நிர்வாகம், கட்டண விகிதங்கள், போக்குவரத்து சுதந்திரம் ஆகியவற்றை தற்காலத்திற்கேற்றபடி மேம்படுத்தி 1888-ம் வருடத்திய ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வது (2) இதற்கென்று அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளையும், கால்வாயையுபயோகிக்கும் இதர நாடுகளையும்கொண்ட ஒரு சர்வதேச மகாநாடு கூட்டவேண்டும், இதர வழிவகைகளையும் இத்துடன்கூட் பரிசீலிக்கலாம்; (3) கால்வாய் நிர்வாகத்திலும், உடைமையிலும் எகிப்துக்குள்ள உரிமைக்குப் பங்கமில்லாத வகையில் எகிப்து ஏற்படுத்தும் ஒரு சூயஸ் கார்பரேஷன் ஸ்தாபனத்துக்கும், கால்வாயையுபயோகிக்கும் இதர நாடுகளைக் கொண்ட ஒரு சர்வதேச ஸ்தாபனத்துக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தல் ; (4) உலகிலுள்ள பல பூகோள பிரதேசங்களுக்கும், நலன்களுக்கும், சரிவர பிரதிநிதித்துவம் கொடுக்கும் வகையில் ஒரு சர்வதேச ஸ்தாபனம் ஏற்படுத்துவது, அதற்கு கால்வாய் உபயோகிக்கும் விஷயமாய் ஆலோசனை கூறவும், தொடர்புகொள்ளவும் அந்தஸ்து உண்டு ; (5) எகிப்து அமைக்கும் சூயஸ் கார்பரேஷன் என்கிற ஸ்தாபனத்தின் வருடாந்திர ரிபோர்டை எகிப்து சர்க்கார் ஐ. நா.வுக்கு அனுப்பிவரவேண்டும்.

இதுதான் இந்தியத் திட்டம் இத்திட்டத்தை இலங்கையும், சோவியத் யூனியனும், இந்தோனீஷியாவும் ஆதரித்தன. சோவியத் யூனியன் சில திருத்தங்கள் கொண்டுவந்தது. மேலைய மூன்று வல்லரசுகளுடன், இந்தியா, எகிப்து, சோவியத் யூனியன் உள்ளிட்ட ஆறுநாடுகளின் தயாரிப்புக கமிட்டி ஒன்று ஏற்படுத்தி பிரச்னைக்குப் பரிகாரம் காண 46 நாடுகள்கொண்ட மகாநாடு கூட்டலாம் என்றது. இந்தியத் திட்டம் வெளியாவதற்கு 2 நாட்களுக்கு முன்பே, சூயஸ் கால்வாய் நிர்வாகத்தில் ஆலோசனை யளிக்க ஒரு சர்வதேச ஆலோசனை யளிக்கும் போர்ட் அமைக்கும் யோசனையை எகிப்து எதிர்க்கப்போவதில்லை என்று நாசர் குறிப்பிட்டார்.

எனவே, இந்தியத் திட்டத்தை மேலைய நாடுகள் ஏற்றிருந்தால் சமாதானமான வழியில், சமரச மனப்பான்மையுடன் எகிப்துடன் பேசி நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம்.

மேலைய நாடுகளின் நோக்கம் அதுவல்ல. எகிப்தின் அரசுரிமைக்கு உலைவைத்து, கால்வாய்மீது ஆதிக்கம் செலுத்தி, காலனி பாணியில் சுரண்டிக் கொழுக்கவேண்டுமென்பதே அவற்றின் குறிக்கோள். எனவே அவை மேனன் திட்டத்தை நிராகரித்தன.

கடைசி முயற்சியாக மேனனும், ஷெபிலாவும் ஒரு முயற்சி செய்து பார்த்தனர். இரு திட்டங்களையும் நாசரிடம் சமர்ப்பியுங்கள், பேச்சு வார்த்தை நடக்கட்டும் என்றனர். இதற்கும் அவை ஒப்பவில்லை. டல்லஸ் திட்டத்தைமட்டும் மகா நாட்டு முடிவாக நாசரிடம் தெரிவிப்பது என்று அவை பிடிவாதம் பிடித்தன. மகா நாடு முறியும் நிலைக்கு வரவே. கடைசியில் அவை டல்லஸ் திட்டத்தை ஆதரிக்கும்—இந்தியா, சோவியத் யூனியன், இலங்கை, இந்தோனீஷியா நீங்கலாக, பாக்கியுள்ள—18 நாடுகள் சார்பில் ஆஸ்டிரேலிய பிரதமர் மென்ஜிஸ் தலைமையில் ஒரு ஐவர் குழுவை நாசரைச் சந்தித்து டல்லஸ் திட்டத்தைச் சமர்ப்பிக்க அனுப்புவதாகவும் மற்றபடி மகா நாட்டு நிகழ்ச்சிக் குறிப்புக்களையெல்லாம் சேர்த்து வேறுய் அனுப்புவதென்றும் ஒத்துக்கொண்டன. மகா நாட்டு முத்திரையுடன் டல்லஸ் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் முயற்சி தோற்றது.

டல்லஸ் திட்டத்தை நாசர் ஏற்கனவே நிராகரித்திருந்தும் கூட, அதையே ஐவர் குழு (அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்வீடன், எதியோபியா, ஈரான், நாடுகளைக்கொண்டது) மூலம் சமர்ப்பிக்க 18 நாடுகள் முடிவுசெய்தது எதைக்காட்டுகிறது? எகிப்துடன் கூடிப்பேச அவை தயராயில்லை; தமது திட்டத்தைத் திணிப்பதிலேயே குறியாயிருக்கின்றன என்பதையே.

இது நடக்கிற காரியமா?

## அத்தியாயம் 8

# மென்ஜிஸ் குழுவின் தூது

ஐவர் தூதுக் குழு நாசரை செப்டம்பர் 2-ம் தேதி சந்தித்தது. இடையே, மேலைய நாடுகளின் மிரட்டல்கள் வலுத்தன. இராணுவப் படை குவிப்பு தொடர்ந்தது. கப்பலோட்டிகளை வாபஸ் வாங்குவோம், கால்வாய்ப் போக்குவரத்து ஸ்தம்பித்தால் எகிப்து தான் ஜவாப்தாரி என்று மிரட்டின. இந்த மிரட்டல்களை நாசர் நிராகரிக்கவே, ஈடன் கப்பலோட்டிகளை வாபஸ்பெறும் யோச

லேயை மென்ஜிஸ் குழுவின் வேலை முடியுமட்டும், ஒத்திப்போட வைத்தார்.

மென்ஜிஸ் குழுவுக்குப் பேச்சுவார்த்தை நடத்தவோ, பேரம் பேசவோ, உரிமை அதிகாரம் ஏதாவது உண்டா என்ற கேள்வி எழுந்தது. கிடையாது—என்றது பிரிட்டனும், பிரான்சும். இதற்கு அர்த்தம் நாசருக்கு உத்தரவு போடவே மென்ஜிஸ் குழு போகிறது என்பது தெளிவாகிறது.

சமாதான காலத்தில் செய்யாத ஒரு அசாதாரண நடவடிக்கையை பிரிட்டன் மேற்கொண்டது. ஆகஸ்ட் 29ம் தேதி, பிரிட்டிஷ் சர்க்கார் பிரெஞ்சு துருப்புக்களை சைப்ரஸ் தீவில் முகாம் போட அனுமதியளித்து, ஆயிரக்கணக்கான பிரெஞ்சுப் படைகள் அங்கு குவிந்தன. திரு. கிருஷ்ண மேனனும், இதர நாடுகளும் இதைக் கண்டித்தன. பிரிட்டனிலேயே எதிர்ப்பு கிளம்பியது.

மேலும், வட அட்லாண்டிக் கூட்டணியின் கவுன்சில் கூட்டம் சூயஸ் கால்வாய் விஷயத்தை விவாதிக்க செப்டம்பர் 5ம் தேதி கூட்டப்பட்டது கூட்டணியின் நோக்கம் தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்குவதே என்று இக்கூட்டம் எடுத்துக்காட்டுகிறது என்று மாஸ்கோ ரேடியோ குறிப்பிட்டது.

பிரிட்டிஷ், பிரெஞ்சு கப்பல்கள் சில நன்னம்பிக்கை முனை வழியாகப் போயின. சூயஸ் கால்வாயைப் பகிஷ்கரிக்கப் போவதாக ஒரு பயமுறுத்தல் இது. இஸ்ரேல் வழியாக ஒரு புது எண்ணெ சப்ளை குழாய் வெட்டுவோம், புதிய கால்வாய் அமைப்போம் என்று காரியசாத்தியமற்ற பித்துக்குளி திட்டங்களைப்பற்றி மேலைய வட்டாரங்கள் கதை விட்டன.

எகிப்து உஷாராயிருந்தது. அரபு லீகின் அரசியல் கமிட்டி டல்லஸ் திட்டத்தைக் கண்டித்து நாசர் கொள்கையைஆதரித்தது.

ஆகஸ்ட் 29ம் தேதி பிரிட்டிஷ்காரர்கள் தலைமையில் உளவு வேலை செய்யும் ஒரு இரகசியக் கூட்டத்தை எகிப்து சர்க்கார் கைது செய்து இராணுவ விசாரணைக்கு அனுப்பியது இதில் இரு பிரிட்டிஷ் தூதராலய அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருந்ததால், அவர்களை எகிப்திலிருந்து சர்க்கார் வெளியேற்றியது. நாசரைக் கவிழ்க்கும் சதிகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டன.

2-9-56ல் நாசரைச் சந்தித்த மென்ஜிஸ் தூதுக்குழு கண்யமாகவே நடத்தப்பட்டது. மென்ஜிஸ் குழு டல்லஸ் திட்டத்தை நாசரிடம் வற்புறுத்தியது. பேச்சு வார்த்தை நடத்தவில்லை. எனவே, அது கொண்டு வந்த டல்லஸ் திட்டத்தை உறுதியாக, பூர்ணமாக, நாசர் நிராகரித்தார்.

மென்ஜிஸ் குழுவுக்குப் பேச்சு வார்த்தை நடத்த உரிமை அதிகாரம் கிடையாது என்றவுடன் குழுவைச் சேர்ந்த சில நாடுகளுக்குள்ளேயே சச்சரவு ஏற்பட்டது. இவ்வாறு உள்ளுக்குள்ளே பூசலும் புகைச்சலுமாய், வெறுங்கையுடன், மென்ஜிஸ் குழு லண்டன் திரும்பியது.

“டல்லஸ் திட்டத்தைப் போல எகிப்துக்கு ஆத்திர மூட்டக் கூடிய செய்கை வேறொன்று இருக்கும் என்று கற்பனை செய்யவும் முடியாது” என்று நாசர் மென்ஜிசுக்கு எழுதினர்.

சூயஸ் கால்வாய் உபயோகிப்பவர்களில் 100க்கு 90 விகிதம் பேர் லண்டன் 18 நாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்ற மென்ஜிஸ் வாதத்தை நாசர் மறுத்தார். கப்பல்கள் இல்லாவிட்டாலும் வியாபாரப் பண்டங்களை அனுப்பும் நாடுகள் அநேகம் உள்ளன—உதாரணமாக, இந்தியா, இந்தோனேஷியா. சாவூதி அரேபியா, அஸ்திரேலியா தாய்லாந்து பாகிஸ்தான் ஈரான், ஈராக், எதியோபியா, சுடான் முதலியன—என்றும் சுட்டிக்காட்டினர். கால்வாய்ப் போக்குவரத்து சுதந்திரத்தை உத்தரவாதம் செய்யும் ஒப்பந்தம் செய்து கொள்ள எகிப்து ஒரு சர்வதேச மகாநாட்டை கூட்டத் தயார் என்றும் கூறினர். மேலைய நாடுகள் இராணுவ பொருளாதார மிரட்டல், நடவடிக்கைகள் எடுப்பதைக் கண்டித்தார். அவை எகிப்தையும், சமாதானத்தையும் மிரட்டுவதாகக் குற்றம் சாட்டினர். ‘நெருக்கடியை’ சிருஷ்டிப்பது பிரிட்டனும், பிரான்சும், பழைய சூயஸ் கம்பெனியும் மட்டுமே என்று அம்பலப்படுத்தினர்.

மென்ஜிஸ் குழு சென்ற சில மணி நேரத்திற்கெல்லாம் நாசர் ஒரு அறிக்கை வெளியிட்டார், உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் ஒரு அழைப்பு அனுப்பினர். எல்லா நாடுகளும் சந்தித்து (1) கால்வாயில் போக்குவரத்துச் சுதந்தரம். பந்தோபஸ்து (2) எதிர்கால போக்குவரத்துக்குத் தேவையான கால்வாய்ச் சீரமைப்புகள் (3) நியாயமான, நேர்மையான கப்பல் கட்டண விகிதங்கள் ஆகிய பிரச்னைகளுக்குச் சமாதான வழியில் பரிகாரங்கள் காண்பதற்கு ஒரு பேச்சுவார்த்தை குழு ஏற்படுத்தவேண்டும் என்றும், அதன் ஆலோசனைகளைக் கவனித்து அங்கீகரிக்கும் சர்வதேச மகாநாடு கூட்டுவதற்கு தேதியும், இடமும் நிர்ணயிக்க வேண்டும் என்றும் எகிப்து தெரிவித்தது.

இந்த மகாநாடு கால்வாய்க் கட்டுப்பாடுபற்றிப் பேசாது; ஆனல் கப்பல் போக்கு வரத்து சுதந்திரம், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றிப் பேசி முடிவுகட்டும். முடிவுகள் எப்படியிருப்பினும் அந்த முடிவுகளுக்கு எகிப்து கட்டுப்படத்தயார், என்று நாசர் அறிவித்தார்.

மென்ஜீஸ் குழு வெறுங்கையுடன் திரும்பியவுடன், மேலைய அணி சிதறிப் போயிற்று. அதனுடைய சகபாடிகளுக்குள்ளேயே குழப்பமும், பீதியும், குடிகொண்டன.

ஈடன் வாயில் நுரை தெறித்தது. பலாத்காரத்தைப் பிரயோகிப்பது உள்பட எல்லா வழிகளையும் கையாள்வோம் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு நாசரை மிரட்டுவதற்குப் பதிலாக, பிரிட்டனுக்குள்ளேயே ஈடனுக்கெதிராக பிரிட்டிஷ் மக்களைத் திருப்பிவிட்டது. அதுவரை ஈடனை ஆதரித்த தொழிற் கட்சித் தலைவர்கள் ஈடன் கொள்கையைக் கடுமையாகத் தாக்கினர்.

ஐ. நா.வைப் புறக்கணிக்கக்கூடாது ஐ. நா.விடம் பிரச்சினையை முடிவுக்குவிடாமல் பலாத்காரம் உபயோகிப்பதை அனுமதிக்கமுடியாது என்று பிரிட்டன், ஜப்பான், ஸ்காண்டினேவிய நாடுகள் முதலிய பல நாடுகளிலிருந்து ஆட்சேபங்கள் கிளம்பின.

எகிப்திய யோசனையை பிரிட்டனும், பிரான்சும் நிராகரித்தன. இந்தியாவும் பிறநாடுகளும் ஆதரிக்கலாயின, ஆதரவு பெருகிக் கொண்டே போய், 27 நாடுகளின் ஆதரவு நாசருக்கு அறிவிக்கப் பட்டது.

## அத்தியாயம் 9

## காமன்ஸில் ஈடன்

பிரிட்டனும் பிரான்சும் கூடிப் பேசின. அவற்றின் முடிவுகளைச் செப்டம்பர் 12-ம் தேதி பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஈடன் வெளியிட்டார்.

இடையே, செப்டம்பர் 14, 15-ம் தேதிகளில் எகிப்தியரல்லாத கால்வாய்க் கப்பலோட்டிகளுக்கு வேலையைத் துறந்து வெளியேறுங்கள் என்று பழைய சூயஸ் கம்பெனி பாரிஸ் நகரிலிருந்து உத்தரவு போட்டது.

ஈடன் காமன்ஸில் வெளியிட்ட திட்டத்தைக் கேட்டு உலகம் திடுக்கிட்டது. அவர் சொன்னதாவது: பிரிட்டனும், பிரான்சும், அமெரிக்காவும் சேர்ந்து "சூயஸ் கால்வாய் உபயோகிப்போர் சங்கம்" ஒன்று நிறுவுமாம். அதில், பின்னால், மற்றவர்கள் சேர்க்கப்படுவார்களாம். அந்தச் சங்கம் தானே கப்பலோட்டிகளை வேலைக்கு அமர்த்திக்கொண்டு சூயஸ் கால்வாயில் பிரயாணம்

செல்லுமாம், தானே கட்டணம வசூலிக்குமாம், தானே கால்வாய் போக்குவரத்தை முறைப்படுத்துமாம். எகிப்துக்கு வருமானமாகப் பணம் கொடுக்குமாம்.

சங்கக் கப்பல்களை கால்வாய்க்குள் செல்லவிடாமல் எகிப்து தடுத்தால்? பலாத்காரம் உள்பட என்ன வேண்டுமானாலும் செய்வோம், பொறுத்துப் பாருங்கள் என்று ஈடன் திமிராகப் பேசினர். தடைசெய்தால் பலாத்காரத்தைக் கையாள்வதற்குப் பதிலாக ஐ. நா. வில் முதலில் தாவாச் செய்வீர்களா என்று தொழிற்கட்சி கேட்ட கேள்விக்கு ஈடன் திட்டவட்டமாகப் பதில் கொடுக்க மறுத்துவிட்டார். நிலைமைக்குத் தக்கபடி எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்வதற்கு பிரிட்டிஷ் சர்க்காருக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்று பேசினர். அவர் கொள்கையை எதிர்த்து தொழிற்கட்சி வோட்டு செய்தது.

எகிப்துடன் வலுவில் மோதிக்கொள்வதற்காகவே இச் சங்கம் தோன்றியுள்ளது என்று உலகெங்கும் கண்டனம் எழுந்தது. யுத்தத்தீ மூட்டும் கொள்ளியே இந்தச் சங்கம். நாசர் இதை எதிர்த்தால் சமாதானத்துக்குப் பங்கம் விளைத்ததாகப் பழி சுமத்தி ஐ. நா. வில் குற்றம் சாட்டி, கால்வாயில் பலவந்தமாக இராணுவ நடவடிக்கை எடுப்பது இச் சங்கத்தின் நோக்கம், திட்டம், எல்லாம் என்று உலகம் உணர்ந்தது.

இதுவும் டல்லஸ் மூளையில் உதித்த திட்டம்தான்.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் உலக யுத்தம் மூளும்; எகிப்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதுதான் ஒரே வழி; சூயஸ் பிரச்சனை கடுமையாகிவிட்டால் அதை இந்தியாவின் தேசியப் பிரச்சனையாகக் கருதி எல்லா இந்தியக் கட்சிகளையும் இந்திய சர்க்கார் கலந்தாலோசிக்கும் என்று லோக சபையில் பிரதம மந்திரி நேரு அறிவித்தார். சீனப் பிரதமர் சூயன்லாய் எகிப்தைப் பலமாக ஆதரித்தார் சீன உதவித் தலைவர் கோமோஜோ எகிப்து தாக்கப்பட்டால் அதன் பாதுகாப்புக்குத் தான் முதல் தொண்டனாகப் பணியாற்றச் செல்வேன் என்று அறிவித்தார்.

மேனன் திட்டப்படி சூயஸ் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்துக, என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை வற்புறுத்தியது. நாசரின் தேசவுடமை நடவடிக்கை ஆசியாவுக்கு எடுத்துக்காட்டு; எகிப்து தாக்கப்பட்டால் ஆசியப் படை ஒன்றுதிரட்டி எகிப்து பாதுகாப்புக்கு அனுப்புவோம் என்று லோஹியா—சோஷலிஸ்டுக் கட்சி தெரிவித்தது. "சூயஸ் விஷயத்தில் மேலைய நாடுகள் அனுஷ்டிக்கும் கொள்கை மகாமோசமானது. பிரிட்டிஷ் கொள்கை பச்சையான ஆக்கிரமிப்புத் தவிற

வேறில்லை" என்று இராஜாஜி தெரிவித்தார். "உபயோகிப்போர் சங்கம்" என்பது யுத்த நடவடிக்கைகளுக்காகச் சில நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தமே. அணுகுண்டு யுத்தம்பற்றி மக்களிடையே நிலவும் பயத்தை பிரிட்டன் உபயோகித்துக்கொள்ளப் பார்க்கிறது. இதர நடுவுநிலை நாடுகளையும் மிரட்டிப் பணிய வைக்கும் நோக்குடன் கூடிய நடவடிக்கை அது" என்று இராஜாஜி ஆணித்தரமாகக் கண்டித்தார். (17-9-56).

சோவியத் பிரதமர் புல்கானின் ஒரு யோசனை தெரிவித்தார். பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, இந்தியா, எகிப்து சோவியத் யூனியன் ஆகிய 6 நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கூடி, சமாதானமாய்ப் பிரச்னையைத் தீர்க்க வழி பார்க்கலாமென்றும், அவற்றைப் பின்னர் ஒரு சர்வதேச மகாநாட்டின் முன்பு சமர்ப்பித்து ஊர்ஜிதம் செய்யலாம் என்றும் கூறினார்.

சங்கத் திட்டம் ஆபத்தானது என்று உலகக் கண்டனம் கடுமையாகிவிடவே, டல்லஸ் பின்வாங்கினார். சங்கத்தின்பேரால் செல்லும் அமெரிக்கக் கப்பல்கள் பலாத்காரமாக சூயஸ் கால்வாயில் நுழைந்து செல்லாது என்று டல்லஸ் அறிவித்தார்.

இது பிரிட்டிஷ், பிரெஞ்சு மந்திரிசபைகளிலும், வட்டாரங்களிலும் ஒரே குழப்பத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்கிது. இனி திட்டத்தை யார் மதிப்பார்கள் என்று முணுமுணுத்தன.

"உபயோகிப்போர் சங்கம்" என்கிற யோசனை ஆபத்தானது மட்டுமல்ல, காரிய சாத்தியமற்றது என்பதும் வரவர மேலைய நாடுகளுக்குப் புரியலாயிற்று. பலவந்தமாகக் கப்பல்களைக் கால்வாயில் செலுத்தினாலும், கரையோர சிக்னல் சிப்பந்திகளின் உதவியின்றிப் போக்குவரத்து சாத்தியமில்லை என்று கண்டனர். ரயில் என்ஜினில் டிரைவர் ஏறிக்கொண்டு ரயில்வண்டி ஓட்டினால் போதுமா, ஸ்டேஷன் மாஸ்டர்கள், காங்கிமேன், பாயின்ட்ஸ்மேன், சிப்பந்திகளின் ஒத்துழைப்பு அவசியமில்லையா ? என்று உலகம் இத்திட்டத்தை எள்ளி நகையாடியது.

சூயஸ் கால்வாயைத் துறந்து நன்னம்பிக்கை முனையைச் சுற்றி கப்பல்களை அனுப்புவதற்கு டல்லஸ் ஏற்பாடு செய்தார். எண்ணைகொண்டு செல்லும் அமெரிக்கக் கப்பல்களைக் கொடுத்து உதவவும், அமெரிக்க எண்ணையை மேற்கு ஐரோப்பிய நாடுகள் வாங்குவதற்கு டாலர் கடன் கொடுக்கவும், டல்லஸ் தயார் என்றார்! இது சூயஸ் கால்வாயைப் பகிஷ்காரம் செய்வதாகுமல்லவா என்று ஒரு நிருபர் கேட்டபோது டல்லஸ் முகம் சிவந்து போயிற்று.

பகிஷ்காரம் செய்தால், எகிப்தைவிட இவர்களுக்குத் தான் நஷ்டம் அதிகமாகும். மேலும் ஜெர்மனி, இத்தாலி, நார்வே, ஸ்வீடன், ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகள் பகிஷ்காரத்தில் சேராவிட்டால் பகிஷ்காரம் பிசுபிசுத்துவிடும். அவை சேருவதாயுமில்லை.

''உபயோகிப்போர் சங்க'' யோசனையை பாகிஸ்தான் கடுமை யாக எதிர்த்தது பலருக்கு ஆச்சரியமளித்தது. மேலும் நாசரின் சர்வதேச மகாநாட்டு யோசனையைப் பாகிஸ்தான் வரவேற்று, அதில் கலந்துகொள்ள தனது சம்மதத்தைத் தெரிவித்தது. உலக அபிப்பிராயமும், மத்திய கிழக்கு அபிப்பிராயமும் எத்திசையில் போகிறது என்பதற்கு அது ஒரு அத்தாட்சி. பாகிஸ்தான் முதல் மகாநாட்டில் டல்லஸ் திட்டத்தை ஆதரித்ததும், அதை நாசர் வருத்தத்துடன் கண்டித்ததும் உலகறிந்த சங்கதி.

இந்தக் குழப்பமான நிலைமையில் 15-9-56ல் சோவியத் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டது.

"அணுகுண்டு, ஜலவாயுகுண்டு இருந்துவரும்இந்த யுகத்தில் பழங்காலத்து காலனி முறைக்கு லாயக்கான இராணுவ மிரட்டல் கள் பயனளிக்காது" என்றும் ''மேலைய நாடுகளின் இராணுவ ஏற் பாடுகளைக் கண்டு சோவியத் யூனியன் கவலையற்றிருக்கமுடியாது'' என்றும், எச்சரித்தது. மேலைய நடவடிக்கைகள் ஐ. நா. சாஸனத் திற்கு விரோதம் என்று கூறியது. "சூயஸ் கால்வாய் உபயோ கிப்போர் சங்கம்'' எகிப்தைப் பழைய காலனி நிலைமைக்குத் தள்ளி விடும் முயற்சியே என்றது. இதனால் மத்திய கிழக்கில் சமாதா னத்திற்குப் பங்கம் ஏற்படும் என்றும், யுத்தம் ஆரம்பித்தால் ஏகாதி பத்யங்களின் பொருளும் உயிரும் போவதுடன், ஆசிய ஆப்ரிக்க மக்களின் தீராக் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்றும் எச்சரித் தது.

அதே நாளில், "எகிப்து அனுமதியின்றி உள்ளே வருபவர் கள் உயிரோடு திரும்பமாட்டார்கள்'' என்று நாசர் ஒரு பொதுக் கூட்டத்தில் எச்சரித்தார். அன்று கால்வாய்க் கப்பலோட்டிகள் வெளியேறியதைக் குறிப்பிட்டு, இது பிரிட்டிஷ் வெளிநாட்டு மந் திரியும் பழைய சூயஸ் கம்பெனியும் கூடிச்செய்த ஏற்பாடு என்றார். கால்வாய்ப் போக்குவரத்து ஸ்தம்பிப்பு எதுவுமின்றி நடந்துவரு வதைக் குறிப்பிட்டு, எகிப்து கப்பலோட்டிகளுக்கும், வெளியேறாது தங்கிய இதர நாட்டு கப்பலோட்டிகளுக்கும், புதிய கப்பலோட்டி களுக்கும் பட்டங்கள் வழங்கினார்.

அந்நிய நாடுகளைச் சேர்ந்த 90 கப்பலோட்டிகளும், 400 அதி காரிகளும் செப்டம்பர் 14 இரவிலும் 15 காலையிலும் வெளியேறி

ளர் என்ற போதிலும், வழக்கத்திற்கு அதிகமாகவே அன்று மொத்தம் 50 கப்பல்கள் கால்வாயை இரு திசையிலும் கடந்து சென்றன என்று புதிய சூயஸ் கம்பெனி அதிகாரி தெரிவித்தார்.

ஏகாதிபத்யவாதிகள் முகத்தில் அசடு வழிந்தது. திகைத்தனர்.

இனிமேல் "உபயோகிப்போர் சங்கத்தின்" சார்பில் சொந்தக் கப்பலோட்டிகளை வைத்துக் கொண்டு போவதில் பயனில்லை. எகிப்துதனது கப்பலோட்டிகளைக்கொண்டே போக்குவரத்து நடத்தும். சூயஸ் கால்வாய்ப் போக்குவரத்தை எகிப்து பந்தோபஸ்தாக, திறமையாக, நிர்வகித்து நடத்த முடியாது என்ற ஏகாதிபத்ய பிரசாரம் வெறும் புளுகு மூட்டையே என்று நிருபிக்கப்பட்டது. இனிமேலும், எகிப்தை வலுச் சண்டைக்கு எப்படி இழுப்பது என்று மேலைய நாடுகள் தலையைச் சொறிந்து கொண்டன.

மேலைய நாட்டுக் கப்பலோட்டிகளுடன் கப்பலைக் கால்வாயில் செலுத்த முயற்சித்தால் எகிப்து எதிர்க்கும் என்று நாசர் 16ம் தேதி யறிவித்தார்.

## அத்தியாயம் 10

# அணியிலே குழப்பம்!

இந்த நிகழ்ச்சி வளர்ச்சிகளைக் கண்டு முன்பு டல்லஸ் திட்டத்தை ஆதரித்த 18 நாடுகளிடையே ஊசலாட்டமும், பிளவும் அதிகரித்தது

எனவே செப்டம்பர் மாதத்தில் கூடிய இரண்டாவது மகாநாடு குழப்பத்துடன் ஆரம்பித்து குழப்பத்துடன் முடிந்தது. அதில் டல்லஸ் ஒரு திட்டம் வைத்தார். அந்தத் திட்டம் முன்பு காமன்ஸ் சபையில் ஈடன் வைத்த திட்டத்திலிருந்து பல அம்சங்களில் மாறுபட்டிருந்தது. உலக மக்கள் அபிப்பிராயம் எவ்வளவு ஆழமாக ஏகாதிபத்யங்களை நிலைகுலையச் செய்துள்ளன என்பதையே இது காட்டியது.

"உபயோகிப்போர் சங்கம்" என்கிற கருத்தை டல்லஸ் விட்டுக் கொடுக்காவிட்டாலும், அவரது சில உரைகள் முக்கியத்துவம் பெற்றன: (1) பலாத்காரமாகக் கால்வாயில் நுழைவதில்லை (2) அவரவர்கள் இஷ்டப்பட்டால் கால்வாய்ப் போக்கு வரத்துக் கட்டணத்தை எகிப்துக்கே செலுத்தலாம் (3) சங்கத்தில் சேருபவர்கள் சொந்தக் கப்பலோட்டிகளை ஏற்படுத்திக் கொண்டு

கால்வாய்க்குச் செல்ல வேண்டியதில்லை (4) சங்கத்தில் சேருவோர் எந்த வித பொறுப்புகளும் ஏற்பவர்களாக மாட்டார்கள்.

இதன் அர்த்தமென்ன? மேலைய நாடுகளின் ஆரம்ப "உபயோகிப்போர் சங்க" திட்டம் படுதோல்வியடைந்தது என்பதே.

இந்த அடிப்படையில் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளைக்கொண்ட ஒரு "உபயோகிப்போர் சங்கம்" மகாநாட்டு முடிவில் ஸ்தாபிக்கப்பட்டது. மற்ற பிரதிநிதிகள் தத்தம் நாட்டுக்குத் திரும்பி சர்க்கார்களையும், சட்டசபைகளையும் கலந்தபிறகு அங்கத்தினர்களாகச் சேரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. முக்கிய பங்குகொண்ட பிரெஞ்சு பிரதிநிதியே மேலைய திட்டத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டார். மந்திரி சபையைக் கலக்க வேண்டும் என்று கூறிவிட்டார். 18 பேரில் மொத்தம் 12 பேர் தான் சேர்வார்கள் என்று இப்பொழுதே பேசப்பட்டுவருகிறது. காரியத்திலிறங்கும்போது, அந்தத் தொகையும் குறையலாம் என்கிறார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல, ஏகாதிபத்யக் கூட்டணி தேய்ந்து வருகிறது.

இந்தச் "சங்கம்", கால்வாய்க்குச் சர்வதேசக் கட்டுபாடு என்கிற அடிப்படையில்தான், எகிப்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்று மகாநாட்டு அறிக்கை கூறுகிறது இது எப்படி சாத்தியம் என்று டல்லஸோ, ஈடனோ விளக்கவில்லை எகிப்துக்குக் கட்டணம் செலுத்தாமல் போக்குவரத்து நடத்துவது எப்படி என்பது பற்றியும் யாரும் விளக்கத் தயாராயில்லை. பிரதிநிதிகளுக்குள்ளேயே சர்வம் குழப்பமயம்.

அமெரிக்காவுக்கு டல்லஸ் திரும்பியவுடன் அமெரிக்கக் கப்பலோட்டிகள் எகிப்துக்குப்போக அனுமதிக்கப்பட்டுவிட்டார்கள் என்று செய்தி வெளியாயிற்று இதற்கு அர்த்தம், சூயஸ் கால்வாயை ஸ்தம்பிக்க வைப்பதோ, பகிஷ்காரம் செய்வதோ, பைத்தியக்காரத்தனமான திட்டம் என்பதை அமெரிக்காவும் உணர்ந்து விட்டது என்பதே.

பிரிட்டனிலும், பிரான்ஞ்சிலும் அமெரிக்காமீது கோபம். டல்லஸ் காட்டிக்கொடுத்து விட்டார் என்று வலதுசாரி இராஜ தந்திரிகள் ஏசுகிறார்கள். எப்படிப் போனாலும் சரி, பிரிட்டனும் பிரான்சும் கடைசிவரையிலும் ஒன்றாய் நிற்கும், சூயஸ் கால்வாயை ஒரேயொரு நாட்டுகட்டுப்பாட்டில் விட்டுவைக்கப் போவதில்லை என்று அவை கதறுகின்றன. ஏமாற்றம். அதனின்று பிறந்த ஆத்திரம்.

இரண்டாவது லண்டன் மகாநாடு பலாத்காரத்தைக்கொண்டு

சூயஸ் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியை உலகம் கண்டித்து ஒதுக்கி விட்டது. ஆத்திரமூட்டும் திட்டங்களைக் குழி தோண்டிப் புதைத்து விட்டது. எகிப்து அரசுரிமைக்குப் பங்கம் விளைவிக்க முயல்பவர்களை 'ஆக்ரமிப்புக்காரர்' என்று பறை சாற்றிவிட்டது. எகிப்துடன் பேச்சு வார்த்தை நடத்தாமல், எகிப்துடைய விருப்பமும் ஒப்புதலும் இல்லாமல், எந்தத் திட்டமும் பயனளிக்காது என்று காட்டிவிட்டது.

இப்போது பிரச்சினையை ஐ. நா. பந்தோபஸ்து கவுன்சிலுக்குப் பிரிட்டனும் பிரான்சும் கொண்டுபோயுள்ளன. லண்டனுக்கு மேனன் சென்றுள்ளார்.

எகிப்து அரசுரிமையை அங்கீகரித்தல்; எகிப்து ஒப்புதலுடன் கால்வாய்ப் போக்குவரத்து சுதந்திரம், பந்தோபஸ்து பற்றி ஒரு சர்வதேச ஒத்துழைப்பு ஏற்பாடு; மத்திய கிழக்கில் சமாதானம், இராணுவபொருளாதார நிர்ப்பந்த நடவடிக்கைகளை வாபஸ்பெறுதல்; நாசர் அறிவித்த வகைப்பட்ட ஒரு சர்வதேச மகாநாடு; இந்த அடிப்படைகளில் சூயஸ் நெருக்கடியைப் பைசல் செய்வதற்கு எல்லாச் சமாதான சக்திகளும் உலகெங்குமுள்ள மக்களைத் திரட்டவேண்டும்.

பிரிட்டிஷ் பிரெஞ்சு 'சாமியாட்டங்களும்" ஆக்ரமிப்பு யோசனைகளும் நிற்கவில்லை. 'உபயோகிப்போர் சங்கம்' ஒரு ஆபத்தான கேள்விக் குறிபோல மனிதகுலத்தைப் பயமுறுத்துகிறது. எனவே எச்சரிக்கையின்றி திருப்தி மனப்பான்மையுடன் செயலொழிந்து நிற்பதற்குக்காரணமில்லை.

சூயஸ் பிரச்சினையில் இந்திய சர்க்காரும், இந்திய மக்களும் வகித்த பாத்திரம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. ஆசிய ஆப்ரிக்க அராபிய மக்களின் ஒற்றுமையையும் ஆக்கல் சக்தியையும் தன்னம்பிக்கையையும் அது பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது.

இப்பணியில் இந்திய மக்கள் தொடர்ந்து முன்னணியில் நிற்பார்களாக.